வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 21.07.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 203 | பக்கங்கள் : 16


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவது உறுதி

## நேற்று உறுதிபடத் தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஜூலை 21

**"சவால்களுக்கு மத்தியில், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தியுள்ளோம். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவது உறுதி. நாங்கள் வெற்றி பெறுவோம் என்பதில், எனக்கு எந்த சந்தேகமும் இல்லை."**

**- இவ்வாறு நேற்று உறுதியாகக் கூறினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

கொழும்பு ஸ்ரீஜயவர்தனபுர மொனார்க் இம்பீரியல் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற, உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் பிரதிநிதிகளைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

சவால்களை வெற்றிகொண்டு நாட்டின் பொருளாதாரத்தை வலுவான அடித்தளத்தில் முன்னேற்றி கொண்டு வந்துள்ளோம். அதனால்தான் இன்று மக்கள் கையில் பணம் இருக்கிறது. அன்றைய

15

## ரணிலின் சின்னம் குதிரை?

கொழும்பு, ஜூலை 21

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய வேட்பாளராகக் களமிறங்கவுள்ள ரணில் விக்கிரமசிங்க, பொதுச் சின்னமாக குதிரைச் சின்னத்தை தேர்ந்தெடுக்கக் கூடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுக் கூட்டணியின் பெயர், சின்னம் என்பன பற்றிய இறுதிக் கட்ட கலந்துரையாடல் தற்போது இடம்பெற்று வருகின்றது.

யானை, அன்னம் மற்றும் மொட்டு என்பன பொதுச் சின்னமாக இருக்கக்கூடாது என

15



## தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் காலமானார்

யாழ்ப்பாணம், ஜூலை 21

ஈழவிடுதலைப் போராட்ட இயக்கங்களில் ஒன்றான தமிழீழ இராணுவத்தின் தலைவர் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் (பனாகொட மகேஸ்வரன்) யாழ்ப்பாணத்தில் காலமானார்.

புங்குடுதீவை பூர்வீகமாக கொண்ட மகேஸ்வரன், பின்னர் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் வாழ்ந்தார்.

70களின் நடுப் பகுதியில்

15

## தேர்தலை ஒத்திவைக்கும் தேவை அரசுக்கு இல்லை

### கூறுகின்றார் எஸ்.எம். சந்திரசேன

கொழும்பு, ஜூலை 21

நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளது. பொருளாதாரமும் சிறந்த நிலைக்கு திரும்புகின்றது. எனவே, ஜனாதிபதித் தேர்தலை பிற்போடவேண்டிய எந்தவொரு தேவைப்பாடும் அரசுக்கு கிடையாது என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

15

## மூளாய் வைத்தியசாலையில் தங்கநகைகள், பணம் திருட்டு!

யாழ்ப்பாணம், ஜூலை 21

மூளாய் வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்புப் பணியாளர்களின் நகை மற்றும் பணம் திருடப்பட்டுள்ளன.

வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்புப் பணிகளில் ஈடுபடும் பணியாளர்களின் கடமை நேரத்தில், அவர்களின் உடைமைகளை பாதுகாப்பாக வைப்பதற்காக அறையொன்றினுள் 09 பெட்டகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

வழமை போன்று நேற்று முன்தினமும் பணியாளர்கள் தமது உடைமைகள் மற்றும்

15

## மாத்தறை சிறைக்குள் தாக்குதல்!

கொழும்பு, ஜூலை 21

மாத்தறை சிறைச்சாலையில் கைதி ஒருவர் மற்றொரு கைதியின் முகத்தை பிளேட்டால் வெட்டி காயப்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று

15

## பல்கலைக் கட்டமைப்புக்குள் அச்சுறுத்தல் விடும் அரசியல்!

### அதனை இல்லாதொழிக்கவேண்டும் என்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூலை 21

பல்கலைக்கழகக் கட்டமைப்புக்குள் அச்சுறுத்தும் அரசியலை இல்லாதொழிக்கவேண்டும். மாணவர்கள் சுதந்திரமாகக் கல்வி கற்கவேண்டுமானால் பல்கலைக் கழக முறைமையை மறுசீரமைக்கவேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்களைச் சீர்குலைக்காமல் முறையான கல்வி நிறுவனங்களாக மாற்றுவதற்கான காலம் வந்துள்ளதாகவும் ஜனாதிபதி

15

### தமிழ் பொது வேட்பாளர்:

## முக்கிய ஒப்பந்தம் நாளை கைச்சாத்து?

கொழும்பு, ஜூலை 21

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான உடன்படிக்கையொன்று நாளை திங்கட்கிழமை கைச்சாத்திடப்படவுள்ளது.**

தமிழ்ச் சிவில் சமூகத்தினருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கு இடையிலும் இந்த உடன்படிக்கை யாழ்ப்பாணத்தில் வைத்து கைச்சாத்திடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்கள் எவருக்கும் வாக்களித்தும் எந்தவித பயனும் இல்லை என்று தமிழ்க் கட்சியினரும் சிவில் சமூகத்தினரும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

இதனால் தமிழ் மக்களின் நிலைமையையும், தமிழ் மக்களின் பிரச்சினைகள், தேவைகளை வெளிப்படுத்தும் வகையிலும்

15

## ஜனாதிபதித் தேர்தலை பின்தள்ள வாய்ப்புண்டு!

### பாராளுமன்றமும் கலைக்கப்படும் என்கிறார் காமினி வலேபொட எம்.பி.

கொழும்பு, ஜூலை 21

ஜனாதிபதித் தேர்தலை ஒத்தி வைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இன்னும் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மூலம் பாராளுமன்றமும் கலைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

15

## 22ஆவது திருத்தத்துக்கு இப்போது தேவை என்ன?

### கேள்வி எழுப்புகிறார் சுமந்திரன்

கொழும்பு, ஜூலை 21

அரசமைப்பின் 22ஆவது திருத்த சட்டமூலத்தை தற்போது ஏன் கொண்டுவரவேண்டும் அதற்கான தேவை என்னவென தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்ஏ சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்து நாளிதழுக்கு கருத்து தெரிவிக்கையில்

15

## ரணில் - விஜயதாச இடையே முறுகல்!

### அமைச்சுப் பதவியை பறிக்க திட்டம்?

கொழும்பு, ஜூலை 21

22ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டமூலத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வர்த்தமானி மூலம் பிரசுரித்தமை தொடர்பில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தமது கண்டனத்தை பதிவு செய்துள்ளார்.

15

## ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவது நல்லது

### விக்னேஸ்வரன் எம். பி.

யாழ்ப்பாணம், ஜூலை 21

ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவது தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இது

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக வழியில் அணிதிரண்டால் மக்களுக்கு தீர்வு பெற்றுத்தர தயார்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 21

பிரச்னைகளுக்கு வன்முறையற்ற ஜனநாயக முறைப்படி தீர்வினை காண மக்கள் அணிதிரளும் பட்சத்தில் தீர்வினை பெற்றுத்தர எப்போதும் தயாராகவே இருக்கின்றேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஈவினை கிராமத்தின் வளர்ச்சி அந்த மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக அவர்களின் குரலாக தன்னுடைய பங்களிப்பு எப்போதும் இருக்கும் எனவும் அமைச்சர் கூறினார்.

இளம் விவசாய தொழில் முனைவோர் கிராமமாக ஈவினை கிராமம் தெரிவாகியுள்ள நிலையில் அதன் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், இந்த நிகழ்வில் விவசாய முயற்சியாளர்களுக்கான விவசாய உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

முன்பதாக இளம் விவசாய முயற்சியாண்மை கிராமமாக யாழ். மாவட்டத்தில் ஈவினைக் கிராமம் அமைச்சரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலில் இளைஞர்களை தொழில் முயற்சியாளர்களாக மாற்றும் திட்டத்தில் இளம் விவசாய முயற்சியாண்மை கிராமம்" என்ற திட்டம் நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் ஒரு கிராமம் தெரிவு செய்யப்பட்டு நடை முறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் அமைச்சரின் பரிந்துரையில் யாழ். மாவட்டத்தில் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஈவினை கிராமம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. (எ)

# கைதான பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பிணையில் விடுவிப்பு

புத்தளம், ஜூலை 21

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவரை நாளை 22ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

வழக்கு ஒன்றுக்கு முன்னிலையாகாத நிலையில் இருந்த குறித்த பாராளுமன்ற உறுப்பினரை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு புத்தளம் மேலதிக மாவட்ட நீதிபதியும் மாவட்ட நீதிவானுமான அயோனா விமலரத்ன கற்பிட்டி சுற்றுலா நீதிவான் நீதிமன்றில் வைத்து திறந்த பிடியாணை ஒன்றை கடந்த 8 ஆம் திகதி பிறப்பித்திருந்தார்.

இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நேற்றுக் காலை கற்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு சென்றிருந்த போது, அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறிஞ்சிப்பிட்டியில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றின் சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் பொறுப்புக் கூறும் வழக்கு கடந்த 8 ஆம் திகதி கற்பிட்டி சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் குறித்த வழக்கு விசாரணைக்கு சமுகமளிக்காத நிலையில், நீதிவான் இவ்வாறு கைதுக்கான திறந்த பிடியாணை உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதற்கு முன்னரும், குறித்த பாராளுமன்ற உறுப்பினர் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை என்றும் அவர் சார்பில் சட்டத்தரணியும் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரச சார்பற்ற நிறுவனமொன்று இயங்கிவந்த கட்டடத்துக்குள் அத்துமீறி நுழைந்தமை மற்றும் அங்குள்ள சொத்துகளை சேதப்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக கற்பிட்டி பொலிஸாரால் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

## ரூ. 23 இலட்சம் பெறுமதியான

# வெளிநாட்டு சிகரெட்களுடன் பெண் ஒருவர் நேற்றுக் கைது

கொழும்பு, ஜூலை 21

23 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்களுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பெண் ஒருவர் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் நேற்றுச் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சிலாபம், மாரவில பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பெண் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை 03. 15 மணியளவில் அபுதாபியிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்தப் பெண் கொண்டுவந்த பயணப் பொதியிலிருந்து 23, 000 சிகரெட்கள் அடங்கிய 115 சிகரெட் பெட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட பெண் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் எதிர்வரும் 24 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பிள்ளை வளர்ப்பு நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 21

அரும்புகள் இணையத்தள அங்குரார்ப்பணமும் பிள்ளை வளர்ப்பு நூல் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வளாகத்திலுள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

வரவேற்புரையை "அரும்புகள்" சிறுவர் உளநலப் பிரிவு வைத்திய கலாநிதி ஆ. தாட்சாயினியும், வாழ்த்துரையை சத்திர சிகிச்சை நிபுணர், வைத்திய கலாநிதி வெ. சுதர்சனும் நிகழ்த்துவர்.

இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து நூல் வெளியீட்டுரையை பேராசிரியர் தயா சோமசுந்தரம் நிகழ்த்துவார். (எ)



# சிவசிதம்பரத்தின் ஜனனதின நிகழ்வு

வடமராட்சி ஜூலை20

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் மு. சிவசிதம்பரத்தின் ஜனனதின நிகழ்வு நேற்று நடைபெற்றது.

யாழ். கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முருகேசு சிவசிதம்பரத்தின் 101ஆவது ஜனன தின நிகழ்வு நேற்றுக் காலை 10. 30 மணியளவில் நெல்லியடியில் அமைந்துள்ள அன்னாரின் சிலை வளாகத்தில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றிய நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (எ-2)

# யாழில் கைக் குழந்தையை கைவிட்டு காதலனுடன் சென்ற குடும்பப் பெண்!

## காதலனும் பெண்ணும் மறியலில்

யாழ்ப்பாணம், ஜூலை 21

தனது இரண்டரை வயது குழந்தையை கைவிட்டு, காதலனுடன் ஊரை விட்டு வெளியேறிய குடும்பப் பெண்ணையும் காதலனையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் கணவன் மற்றும் தனது குழந்தையுடன் வசித்து வந்த குடும்பப் பெண்ணொருவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனது காதலனுடன் ஊரை விட்டு சென்றிருந்தார்.

இது தொடர்பில் அந்தப் பெண்ணின் கணவனால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் பெண்ணையும் அவரது காதலனான இளைஞனையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியதை அடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் இருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (எ)

# 2 மாத சம்பளம் தரவில்லை துன்பப்பட்டதுதான் மிச்சம்

## சவூதியிலிருந்து நாடு திரும்பிய பணிப் பெண் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 21

பணிப் பெண்ணாக சவூதிக்கு சென்ற தனக்கு இரண்டு மாத சம்பளம் தரவில்லை. பேசியதை விட அதிகமாக வேலை வாங்கித் துன்பப்படுத்திவிட்டு நாட்டுக்கு அனுப்பிட்டார்கள். அங்குள்ள விசேட தேவைக்குட்பட்ட பிள்ளையையும் மீளுங்கள் என துணுக்காய், ஆலங்குளம் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணவேணி கலாநாதன் தெரிவித்தார்.

தனது அவல நிலை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஏழு பேர் கொண்ட குடும்பத்தின் வீட்டு வேலைக்கு சென்றேன். மேலதிக வேலை செய்ய என்னால் முடியாது. போகும் போது எனக்கு 49 வயது. ஆரம்ப சம்பளம் அவர்களது பணத்தில் 900 தந்தார்கள். முதல் மாத சம்பளம் இன்னும் தரவில்லை. பின்னர் எனக்கு மேதிலக சமையல் வேலைகள் தந்தார்கள்.

தோட்ட வேலை உட்பட பல வேலைகளை அவர்களது தாய் இறந்ததும் செய்தேன். நான் சிரமப்பட்டேன். என்னைத் துன்பப்படுத்தினார்கள். காலில் அடித்தார்கள். இரண்டு வருடத்தில் திரும்பி வருவதாகவே சென்றிருந்தேன். ஆனால், என்னை வர அவர்கள் விடவில்லை. 2015 ஆம் ஆண்டு 7 ஆம் மாதம் போன நான் கடைசியாக என்னைத் துன்பப்படுத்தி அங்கு பொலிஸில் நிறுத்தி இறுதியாக அரசாங்கத்தால் 2024 ஆம் ஆண்டு தான் அழைத்து வந்தனர்.

எனக்கு இறுதி மாத சம்பளமும் தரவில்லை. நான் உழைக்கச் சென்று தற்போது பணமும் இல்லை. உடலும் இயலாத நிலையில் உள்ளேன். அந்த குடும்பத்தில் விசேட தேவையுடைய ஒரு பிள்ளை உள்ளது. அதுவும் அங்கு துன்பப்படுகிறது. அதனையும் காப்பாற்ற வேண்டும். எனது இரண்டு மாத சம்பளமும் தேவை எனத் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவிக்காலத்தை அதிகரிக்க சர்வஜன வாக்கெடுப்பு தேவை

## ஜனாதிபதி ரணிலுக்கு ஜயம்பதி பதில்



**கொழும்பு, ஜூலை 21**

**19ஆவது அரசமைப்பு திருத்தத்தின்போது, ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் ஆறு வருடங்களில் இருந்து 5 வருடங்களாக குறைக்கப்பட்ட போதி லும், குறித்த பதவிக்காலத்தை அதிகரிக்க கூடிய 6வருட அதிகபட்ச மாற்றத்தை மேற்கொள்ள பரிந்துரைக்கப்படாமைக்கான காரணம் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவைப்படும் என்பதால் ஆகும் என ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்தார்.**

காலியில் நேற்று முன்தினம் நிகழ்வு ஒன்றில் 19ஆவது அரசமைப்பு தொடர்பான ஜனாதிபதியின் கருத்துக்கு ஜயம்பதி நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கை மூலம் பதிலளித்துள்ளார்.

19ஆவது அரசமைப்புத் திருத்தச் செயல்பாடுகளை மேற்பார்வையிடுவதற்கு அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சரவை உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டதுடன், சட்ட வரைவுத் திணைக்களத்தின் ஓய்வு பெற்ற மூன்று சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்னவும் இதில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 19ஆவது அரசமைப்புச் சட்டத்தின் 83ஆவது சரத்தை திருத்தத் தவறியமை, அனுபவமின்மையால் ஜயம்பதி விக்கிரமரத்ன செய்த பிழையாகும் என குறிப்பிட்டிருந்தார்.


இதற்கு பதிலளித்த ஜயம்பதி, 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை தயாரிக்கும் நடவடிக்கையை எந்தவித சர்வஜன வாக்கெடுப்பும் இன்றி முன்னெடுக்க அப்போதைய அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

திருத்தச் செயல்பாட்டின் போது தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு வரைவும் அமைச்சரவை உப குழுவுடன் கலந்துரையாடப்பட்டது.

உப குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இறுதி வரைவை சட்ட வரைவுக்கு அனுப்பி வைத்ததன் பின்னர் பல மாற்றங்கள் செய்யப்பட்டன.

அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டமா அதிபரை பல தடவைகள் அழைத்து இந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடினார். சட்டமா அதிபரின் நிலைப்பாடு காரணமாக சட்டமூலத்தில் பல மாற்றங்களைச் செய்ததாகவும் ஜயம்பதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, 19ஆவது திருத்தச் சட்டம் அப்போதய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், அது உயர்நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட போது, அரசாங்கம் சார்பில் முன்னிலையான சட்டமா அதிபர், எந்தவொரு விதிமுறைகளுக்கும் சர்வஜன வாக்கெடுப்பு தேவையில்லை எனத் தெரிவித்ததாக ஜயம்பதி குறித்த பதிலில் குறிப்பிட்டுள்ளார். (எ)



# இந்தியாவிலிருந்து இலங்கை வந்த சரக்கு கப்பலில் பாரிய தீ விபத்து!

கொழும்பு, ஜூலை 21

இந்தியாவிலிருந்து இலங்கை நோக்கி வந்து கொண்டிருந்த சரக்கு கப்பலில் வெள்ளிக்கிழமை மாலை பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

இந்தக் கப்பல் இந்தியாவின் குஜராத்தின் முந்த்ரா துறைமுகத்திலிருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த போது கோவாவின் தென் மேற்கே உள்ள கார்வார் கடற்பகுதியில் தீ விபத்துக்குள்ளாகியுள்ளது.

எம். வி. மார்ஸ்க் பிராங்பேர்ட் என்ற கப்பலே தீ விபத்துக்குள்ளாகியுள்ளது. தீ விபத்தில் கப்பலின் முன் பகுதி வெடித்துள்ளது. தீயில் சிக்கி ஒருவர் உயிரிழந்தார். உயிரிழந்தவர் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் எனத் தெரிய வந்தது. இந்தக் கப்பலில் பிலிப்பைன்ஸ் மற்றும் உக்ரைன் நாட்டவர்கள் உட்பட 21 பணியாளர்கள் இருந்துள்ளனர்

கப்பலில் தீ மேலும் பரவாமல் இந்திய கடலோர காவல்படை தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

அவசர தீ விபத்தின்போது நீர்த்தாரைக்காக பயன்படுத்தப்படும் டோர்னியர் ரக விமானம் அனுப்பப்பட்டது. இந்தக் கப்பல் சர்வதேச கடல்சார் அபாயகரமான பொருட்களை ஏற்றிச் சென்றதாகவும், கப்பலின் முன் பகுதியில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் இந்திய கடலோர காவல்படை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (எ)

# கடலுக்கு சென்ற இரண்டு மீன் பிடி படகுகள் மாயம்!

## 6 மீனவர்கள் பற்றி தகவல் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களிலிருந்து கடந்த 7 ஆம் திகதி மீன் பிடி தொழிலுக்காகக் கடலுக்குச் சென்ற இரண்டு மீன் பிடி படகுகள் காணாமல் போயுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற மீன் பிடி படகில் நான்கு மீனவர்களும் அம்பாந்தோட்டையிலிருந்து புறப்பட்ட மீன் பிடி படகில் இரண்டு மீனவர்களும் இருந்துள்ளனர்.

இது தொடர்பில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (எ)

# தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்னைகள் குறித்து கலந்துரையாடல்

திருகோணமலை,ஜூலை 21

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்னைகள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானுக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட குழுவினருக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநரின் மாளிகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.



இதன்போது, பெருந்தோட்டத் தமிழர்களுக்கும் வடக்கு கிழக்குத் தமிழர்களுக்கும் இடையில் வலுவான நட்புறவை வளர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் ராஜதுரை மற்றும் போசகர் ஜெகதீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ)

# பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை

## 'கித்துலாவ பபி' கைது

களுத்துறை, ஜூலை 21

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான 'கித்துலாவ பபி' என்பவர் களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை நகரத்தில் பாடசாலை மாணவர்களுக்கு மற்றும் மேலதிக வகுப்பு மாணவர்களுக்கு மிகவும் நுட்சுமமான முறையில் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், களுத்துறை, கித்துலாவ பகுதியில் வைத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து ஆயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்த போதை மாத்திரை ஒன்று 300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

இந்த போதை மாத்திரைகளைக் கொள்வனவு செய்வதற்கு களுத்துறை நகரம், தொடங்கொடை, நாகொடை மற்றும் ஹீனடியாகல ஆகிய பகுதிகளிலிருந்து மாணவர்கள் வருகை தருவதாக விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை களுத்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# தியவன்ன ஓயாவில் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூலை 21

பாராளுமன்றத்துக்கு அருகிலுள்ள தியவன்ன ஓயாவில் மிதந்த நிலையில் நேற்றுச் சனிக்கிழமை காலை ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டதாக தலங்கமை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 60 முதல் 65 வயது மதிக்கத்தக்கவர் எனவும், அவர் தொடர்பில் எந்தவித தகவலும் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் கூறினர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விபத்தில் சிக்கி இளைஞன் பலி!

மாத்தளை, ஜூலை 21

மாத்தளை, தம்புள்ளை - பக்கமுன வீதியில் இடம்பெற்ற விபத்தில் 29 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

பக்கமுனவிலிருந்து தம்புள்ளை நோக்கிப் பயணித்த கார் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றது.

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளை செலுத்திய இளைஞன் படுகாயமடைந்த நிலையில் தம்புள்ளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளை பகுதியில் வசித்த 29 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

இதனையடுத்து கார் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் தம்புள்ளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் சிறுவர்கள் மத்தியில் எச். ஐ. வி. தொற்று அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 21

**நாட்டில் கடந்த 2023 ஆம் ஆண்டில் 40 சிறுவர்கள் எச். ஐ. வி. தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர், மருத்துவர் வினோ தர்மகுலசிங்க தெரிவித்தார்.**

எச். ஐ. வி. தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 607 ஆகவும் 2023 ஆம் ஆண்டில் 694 ஆகவும் அதிகரித்துள் ளது. பாதிக்கப்பட்ட 694 பேரில் 613 ஆண்கள் உள்ளடங் குகின்றனர்.

இந்த நிலையில், 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்கள் மத்தியில் எச். ஐ. வி. தொற்று அதிகரித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ)



# தாந்தாமலையில் கூடும் பல்லாயிரம் பக்தர்கள்

## நாளை காலை தீர்த்தோற்சவம்

தாந்தாமலை, ஜூலை 21

கிழக்கில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தாந்தாமலை சிறீ முருகன் ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இதில் நாளை திங்கட்கிழமை காலை தீர்த்தோற்சவம் நடைபெறவிருப்பதாக ஆலய பரிபாலன சபை செயலாளர் எஸ். பரா தெரிவித்தார்.

அம்பாறையில் மூன்று மலைக்கோவில்கள் உள்ளன. தாந்தாமலை, சங்குமண்கண்டி மலை, உகந்தைமலை என்பனவாகும். இவை 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயங்களாகும்.

கடந்த சில தினங்களாக தாந்தாமலை முருகன் ஆலயத்துக்கு ஆயிரக்கணக்கான அடியார்கள் வந்து வழிபட்டனர்.

மலையில் ஏறி விநாயகரையும் மலையடி வாரத்தில் ஆறுமுகனையும் வழிபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆலய பூஜையில் மிகவும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

பலர் நேர்த்திக் கடன் செலுத்தினர். இங்கு நீண்ட கடைத்தெரு காணப்படுகிறது. அன்னதானம் வழங்கப்படுகிறது. போக்குவரத்து சேவையும் சீராக நடைபெறுகிறது.

நாளை தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளதால் மேலும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து வழிபாடுகளில் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# பரீட்சைக்குச் செல்ல மறுத்த மகளால் உயிர்மாய்த்த தாய்

யாழ்ப்பாணம், ஜூலை 21

கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையின் நடன பாட செய்முறைப் பரீட்சைக்கு மகள் செல்ல மறுத்ததால் தாயார் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்தார்.

யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு பற்றிமா வீதி பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய 5 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்தார்.

உடலில் தீக்காயங்களுடன் தெல்லிப்பழை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# யானையை தாக்கியவர் கைதானார்

கொழும்பு, ஜூலை 21

திறப்பனை, வன்னமடுவ பகுதியில் சுற்றித் திரிந்த 'அக்போ' என்ற யானையை தாக்கிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யானை தாக்கப்பட்டமை தொடர்பில் யானைகள் பாதுகாப்பு அமைப்பினர் திறப்பனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து, நபர் ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# கிரிக்கெட் வீரர் படுகொலை பெண் உட்பட இருவர் கைது

## உள்நாட்டு தயாரிப்பு துப்பாக்கி பறிமுதல்

கொழும்பு, ஜூலை 21

இலங்கையின் 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் தம்மிக்க நிரோசன சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தம்மிக்க நிரோசன கடந்த 16 ஆம் திகதி அம்பலாங்கொட கந்தெவத்தை பகுதியில் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயது சந்தேக நபரொருவர் கடந்த 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், காலி பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய மற்றுமொரு சந்தேக நபரொருவர் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், காலி பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபருடன் தொடர்புகளை பேணியதாக கூறப்படும் கொஸ்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண் ஒருவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் வங்கி கணக்குக்கு இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்காக இரண்டு தடவைகள் பணம் அனுப்பப்பட்டுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்காக பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார். (எ)

# கடல் சீற்றம் ஏற்படும் சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 21

அரபிக் கடல் மற்றும் வங்காள விரிகுடாவில் பலத்த காற்று மற்றும் கடல் சீற்றம் ஏற்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

செயல்பாட்டு நிலையில் உள்ள தென் மேற்குப் பருவப் பெயர்ச்சி நிலை காரணமாக, அரபிக் கடல் பகுதியில் மணிக்கு 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வேகத்தில் மிக பலமான காற்று வீசக்கூடும்.

எனவே, மறு அறிவித்தல் வரும் வரை கடற்படையினர் மற்றும் மீனவர்கள் குறித்த கடல் பகுதிக்கு செல்ல வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்படும் எதிர்கால கணிப்புகள் குறித்து அவதானமாக இருக்குமாறும் கடற்படை மற்றும் மீனவ சமூகங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 900 போதை மாத்திரைகளுடன் 26 வயது இளைஞன் சிக்கினார்

களுத்துறை, ஜூலை 21

30 கிராம் கஞ்சா மற்றும் 900 போதை மாத்திரைகளுடன் 26 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிஹிகதவத்த பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# நீர் இறைக்கும் இயந்திரத்தை திருடிய 2 இளைஞர்கள் கைது

மாத்தளை, ஜூலை 21

மாத்தளை ஹெட்டிப்பொல வனஜீவராசிகள் காரியாலயத்தில் உள்ள கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் இயந்திரத்தை திருடி விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் வில்கமுவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரின் மகன் உட்பட இரு இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு, கைது செய்யப்பட்டவர்கள் 21 மற்றும் 26 வயதுடையவர்கள் என்பதுடன் இவர்கள் நீர் இறைக்கும் இயந்திரத்தை திருடி ஹசலக்க பிரதேசத்தில் உள்ள ஒருவருக்கு 90 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்த போதே பொலிஸாருக்கு இது தொடர்பில் தகவல் கிடைத்துள்ளது.

போதைக்கு அடிமையான இந்த இளைஞர்கள் கடந்த காலங்களில் பல திருட்டுக்களை செய்துள்ளதாக பிரதேச வாசிகளிடமிருந்து பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி தேர்தலில் பொன்சேகா போட்டி?

## அடுத்த மாதம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து பீல்ட் மார்ஷல், பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா அடுத்த (ஓகஸ்ட்) மாதம் அறிவிப்பார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் இராணுவத் தளபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஜகன்ன கிருஷ்ணகுமார், மூலோபாய ஆலோசகர் வெங்கடேஷ் தர்மராஜா ஆகியோரை மேற்கோள்காட்டி இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

சரத் பொன்சேகா சுயாதீன மக்கள் வேட்பாளராக போட்டியிடுவார் எனத் தெரிவித்துள்ள அவர்கள் அவருக்கு பல பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் முக்கிய பிரமுகர்களும் ஆதரவளிப்பாளர்கள் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

சில விடயங்கள் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டியிருந்ததால் அவரது அறிவிப்பு வெளியாவது தாமதமாகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (எ)

# கர்ப்பவதிகள், குழந்தைகள் மத்தியில் அதிகரிக்கும் நீரிழிவு நோய்த் தாக்கம்

கொழும்பு, ஜூலை 21

கடந்த 10 வருட காலப்பகுதியில் கர்ப்பவதிகள் மற்றும் குழந்தைகள் மத்தியில் நீரிழிவு நோய் அதிகரித்துள்ளதாக கொழும்பு தேசிய மருத்துவ மனையின் நீரிழிவு தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் உதித [illegible] தெரிவித்தார்.

நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களில் 20 சதவீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இனிப்பு கலந்த உணவுகளை அதிகம் உண்பதனால் நீரிழிவு நோய் ஏற்படுகின்றது.

நீரிழிவு நோயிலிருந்து எம்மை காத்துக்கொள்ளத் தினமும் குறைந்தது ஒரு மணி நேரமாவது உடற்பயிற்சியில் ஈடுபடுவது மிகவும் அவசியமாகும்.

நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இனிப்பு கலந்த உணவுகளைத் தவிர்த்து காய்கறிகள், இறைச்சி மற்றும் மீன்கள் ஆகிய உணவுகளை உண்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
21.07.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழரசு கட்சி முடங்குமா?

இலங்கை தமிழரசு கட்சியின் நீதிமன்ற சச்சரவு எதிர்பார்த்தது போன்று முடிவுறவில்லை - இலகுவில் முடிவுறுமா? இந்தக் கேள்வி தொடர்பில் கட்சியினரும் அச்சம் கொண்டிருக்கின்றனர். கட்சிக்கான புதிய தலைவர் தெரிவைத் தொடர்ந்து கட்சிக்குள் மிகவும் தெளிவாகவே இரண்டு அணிகள் உருவாகிவிட்டன. அது மிகவும் வெளிப்படையானது.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை எதிர்கொள்ளுவதில் பிளவு தெளிவாகவே தெரிந்தது. தற்போதுள்ள சூழலில், பாராளுமன்ற தேர்தலை முன்னர் போன்று கட்சியால் எதிர்கொள்ள முடியுமா என்னும் கேள்வியுமுண்டு. ஒப்பீட்டடிப்படையில் தமிழ் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குள்ள கட்சியென்னும் தகுதிநிலையும் முன்னர் போன்றில்லை. இந்த நிலையில் தனித்து தேர்தலை எதிர்கொண்டால் முன்னர் போல் கட்சியால் வெற்றியை தக்கவைக்க முடியுமா என்னும் கேள்வியுமுண்டு.

தமிழரசு கட்சியின் தற்போதைய நிலைமை ஒரு விடயத்தை தெளிவுபடுத்துகின்றது - அதாவது, தமிழ் தேசிய அரசியல், தனிநபர்களின் பதவி நிலைப் போட்டிகளுக்குள் சிக்கியிருக்கின்றது. இதற்கு தமிழரசு கட்சியின் இன்றைய நிலைமை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

தமிழரசு கட்சி மட்டுமல்ல அனைத்து கட்சிகளுமே சில நபர்களின் கட்டுப்பாட்டில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. குறித்த தனிநபர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டே கட்சிகளின் எதிர்காலம் தீர்மானிக்கப்படுகின்றது. அடிப்படையில் இது ஒரு அரசியல் பலவீனம். ஏனெனில் அரசியல் கட்சிகள் என்பது, மக்களை வழிநடத்துவதற்கான அரசியல் ஸ்தாபனங்கள். ஆனால், தமிழ் சூழலில் இயங்கிவரும் கட்சிகள் எவையுமே, மக்களுக்கான அரசியல் ஸ்தாபனங்களாக இல்லை.

இவ்வாறானதொரு நிலையில்தான் தமிழரசு கட்சியின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. அடுத்த தேர்தலை கட்சி எதிர்கொள்ள முடியுமா என்னும் கேள்வி அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் கட்சி முற்றிலுமாக முடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. கட்சியின் நிலைப்பாட்டை, கட்சியாக ஒன்றுபட்டு தீர்மானிக்க முடியுமாக இருக்குமானால், அந்தக் கட்சி ஏற்கனவே செயலிழந்துவிட்டது. இந்த நிலையில், தமிழரசு கட்சியின் எதிர்காலத்தில் அக்கறையுள்ளவர்கள் இந்த விடயம் தொடர்பில் அவசரமாக தீர்மானிக்க வேண்டும்.

## "கல்வி கொடுத்த அரசே கொள்ளிவைக்கலாமா?"
### வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம்



அம்பாறை, ஜுலை 21

"பட்டதாரிகள் எப்போதும் வீதிக்கு வருவது ஏன்", "கல்வி கொடுத்த அரசே கொள்ளிவைக்கலாமா?"- இவ்வாறு கேள்வியெழுப்பிய அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள், தமது தொழில் நியமனம் தொடர்பில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் நேற்று ஒன்று கூடி காரைதீவு சந்திக்கு அருகில் தமது பிள்ளைகளுடன் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏனைய மாவட்டங்களைப் போன்று அம்பாறை மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கும் நியமனங்களை வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்று இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், தமது தொழில் நியமனத்தை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு கோசங்களும் எழுப்பப்பட்டன.

"வயது ஏறுகிறது வாழ்க்கை போகுது, வேலை வேண்டும், நாம் கண்ட கனவு பொய்யாகிவிடுமோ?, பட்டம் வீட்டில் நாங்கள் றோட்டில், அழிக்காதே அழிக்காதே எமது எதிர்காலத்தை அழிக்காதே" போன்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்ட பதாகைகளையும் போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

வருடங்கள் போகப்போக வயது போவதன் காரணமாக பின்னர் தொழில் ஒன்றை பெற்றுக்கொள்ள முடியாத நிலையும் ஏற்படும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள் தெரிவித்தனர்.

தமது போராட்டம் தொடர்பில் இதுவரையில் உரிய அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் பட்டதாரிகள் கவலை வெளியிட்டனர்.

குறித்த கவனவீர்ப்புப் போராட்டமானது சிறிது தூரம் பேரணியாக இடம்பெற்றதுடன் அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் உதுமா லெப்பை முகமது முஹ்சீன், செயலாளர் அப்துல் வஹாப் முப்லிஹ் அகமட் உட்பட பிரதிநிதிகளும் குறித்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். அத்தோடு, அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் உள்ளிட்டவர்களும் பட்டதாரிகளின் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியதுடன் பேரணியிலும் பங்கேற்றனர். (எ)

## டெங்குவால் 12 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜுலை 21

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு நோயினால் இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளதாகவும் டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் மாத்திரம் 30,663 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும்,

அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர் எனவும் அவர்களின் மொத்த எண்ணிக்கை 7,119 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவக்கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளதாகவும்,

இதனால் பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுப்புறச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்குமாறும் தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

## பாதாள கும்பலுடன் தொடர்பு மேலும் 30 பேர் கைதாகினர்!

கொழும்பு, ஜுலை 21

பாதாள உலகச் செயல்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 விசேட பொலிஸ் குழுக்களால் நாடளாவிய ரீதியில் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பாதாள உலகக் கும்பலுடன் தொடர்புகளைப் பேணியதாக சந்தேகிக்கப்படும் மேலும் 29 பேர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். காலி பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரின் இந்த சுற்றிவளைப்பில் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர் என கைதான நபர் 39 வயதுடையவர் ஆவார்.

கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் இதுவரை பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 2,379 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியான மரணமும் ஓர் உரிமையே

செ.சண்முகசுந்தரம்

‘வயதான பறவைகள் எங்கே போய் இறக்கின்றன? வானத்திலிருந்து கற்கள் போல நம் மீது அவை விழுகின்றனவா?

தெருக்களில் நாம் அவற்றின் சடலங்களில் தடுமாறி விழுகிறோமா?

இந்தப் பூமியில் நம்மைப் படைத்து அனைத்தையும் பார்த்துக்கொண்டிருக்கிற சர்வவல்லமையும் உள்ளவர், நம்மை அழைத்துச் செல்ல சரியான ஏற்பாடுகளைச் செய்துள்ளார் என்று நீங்கள் நினைக்கவில்லையா?’

‘THE MINISTRY OF UTMOST HAPPINESS’ நாவலில் எழுத்தாளர் அருந்ததி ராய் எழுதிய வரிகள் இவை.

மரணம் பற்றிய அறியாமையோ, அது குறித்த பயமோ உள்ளவர்களை ‘Death Illiterates’ என்று இப்போது அழைக்கிறார்கள். நவீன உலகில் Death illiterates தொகை பெருகிவிட்டதாக லான்செட் மருத்துவ ஆய்விதழ், 2022ஆம் ஆண்டில் வெளியிட்ட அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

நம் ஒவ்வொருவர் வீட்டிலும் இப்போது 70 வயதைத் தாண்டிய ஓர் அம்மாவோ, அப்பாவோ, பாட்டியோ அல்லது தாத்தாவோ இருப்பார்கள். கடந்த இருபதாண்டு மருத்துவ முன்னேற்றங்களில் நம் நாட்டின் சராசரி ஆயுள்காலம் எழுபது வயதை நெருங்கிவிட்டது. சர்க்கரை நோயும், இதய நோய்களும் ஒவ்வொரு வீட்டிலும் குடிகொண்டிருக்கின்றன.

சிறு நகரங்கள், ஊர்களிலும்கூட மருத்துவமனைகளின் எண்ணிக்கை பெருகிவிட்டது. ஊர் வளர்ச்சி அடைந்திருக்கிறதோ இல்லையோ நோயாளிகளின் எண்ணிக்கை வளர்ச்சி அடைந்திருக்கிறது. வீதிக்கு வீதி முன்பெல்லாம் தொலைபேசிக் கூண்டுகள் இருந்தது போல் இப்போது மருந்துக்கடைகள் பெருகிவிட்டன.

**அதிகரிக்கும் அழுத்தம்:**

நாட்டில் ஏற்பட்டிருக்கும் மருத்துவ அறிவியல் முன்னேற்றங்களால், 70 வயதைத் தாண்டிய முதியோர்களின் எண்ணிக்கை ஐந்து கோடிக்கு மேல் போய்விட்டதாக ஒரு புள்ளி விவரம் கூறுகிறது.

முன்புபோல இப்போது கூட்டுக் குடும்பம் இல்லை. நோய்வாய்ப்பட்ட முதியோரைக் கவனிக்க நம் வீட்டில்



ஆள்கள் யாருமில்லை. வாடகைக்குச் செவிலியர்களை நியமித்துச் சிலர் தங்கள் கடமையை முடித்துக்கொள்கிறோம். வாழ்நாளின் இறுதிக்கட்டத்தில் இருக்கவே இருக்கிறது தீவிர சிகிச்சைப் பிரிவு. இது ஒரு சர்வரோக நிவாரணி.

தீவிர சிகிச்சைப் பிரிவில் இறப்பது என்பது இப்போதெல்லாம் ஒரு சமூக அந்தஸ்தாக மாறிப்போய்விட்டது. தீவிர சிகிச்சைப் பிரிவில் கிடைக்கும் வெண்டிலேட்டர் உள்ளிட்ட வசதியால் எந்த நட்சத்திரத்தில் மகன்- மகள் பிறக்கவேண்டும் எனக் குடும்பங்கள் நிர்ணயம் செய்தது போல, எந்த நேரத்தில் தந்தை இறந்துபோக வேண்டும் என்பதை மகனும், மகளும், நிர்வாக வசதிக்காக மருத்துவமனைகளும் முடிவுசெய்து கொள்கின்றன.

**மரணத்தின் தேர்வு:**

வளர்ந்த மேலை நாடுகளில் தங்கள் இறப்பு எப்படி இருக்க வேண்டும் என உயில் எழுதி வைக்கும் பழக்கம் அதிகரித்துவருகிறது. அதில் தங்கள் வீடுகளில் இயற்கையாக, அமைதியான முறையில் மரணமடையவே பலர் விரும்புகிறார்கள். மேலை நாடுகளில் தீவிர சிகிச்சைப் பிரிவில் இறப்பவர்கள் 10.3 வீதம் மட்டுமே. இதுவே இந்தியாவில் உயிர் பிரியும் தருவாயில் 70 வீதம் பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் நாள்களை நீட்டித்துக் கொண்டிருக்கின்றனர்.

இனியும் சிகிச்சை கொடுத்துப் பலனில்லை இனியும் பிழைக்க மாட்டார் என மருத்துவர் அறிவுறுத்திய பிறகும்கூட நாம் நோயாளிகளை வீட்டுக்கு அழைத்து வரத் தயங்கு கிறோம். ஏதாவது நடந்து நம் அன்புக்குரியவர்கள் பிழைத்துவிட மாட்டார்களா என எண்ணுவதே அதற்குக் காரணம்.

நம்முடைய நோய்ப் பிரச்சினைகள் அனைத்தையும் தீவிர சிகிச்சைப் பிரிவு பார்த்துக்கொள்ளும் என்கிற அதீத நம்பிக்கை நமக்கு இருக்கிறது. இன்னொரு பக்கம், இறக்கும்வரை வீட்டில் இவர்களை யார் பார்த்துக் கொள்வது என எண்ணுபவர்களும் உண்டு. பாப்லோ நெருதாவின் கவிதை ஒன்று உண்டு, ‘பாதங்கள் அற்ற ஒரு செருப்பைப் போல, உடுப்பவன் அற்ற ஓர் உடையைப் போல வரும் இறப்பு’.

நெருதாவின் இக்கவிதையைப் போலவே இறப்பானது ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாக நிகழ வேண்டும். முன்பு சொந்தங்கள் எல்லாம் ஆறுதலாக இருந்தனர். வீட்டில் முதியவர்களின் இறப்பை நிதானமாகவும் அச்சமின்றியும் எதிர்கொண்டனர். ஆனால், ஒரு தலைமுறை இடைவெளியில் இப்போது நிலைமை மாறிவிட்டது. சில வேதனையான நிகழ்வுகளை நாம் கேள்விப்படுகிறோம். இறந்துபோன பிறகும் தங்கள் சடலங்களை வாங்க ஆள்கள் இல்லாத செல்வந்தர்களும் நம் சமூகத்தில் உண்டு.

அதே நேரத்தில், முதியவர்கள், குடும்ப உறுப்பினர்கள் நோய்வாய்ப் பட்டிருந்தாலும் அவர்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்திசெய்து கொண்டிருக்கிற லட்சக்கணக்கான மனிதர்கள் இந்தச் சமூகத்தில் வாழ்ந்து கொண்டி ருக்கிறார்கள். இவர்கள்தான் நமக்கு நம்பிக்கையளிப்பவர்கள்.

இனிக் குணப்படுத்தவே இயலாது என மருத்துவர்களால் கைவிடப்பட்ட நம் தாய் - தந்தையருக்கு, தாத்தா - பாட்டிமாருக்கு எவ்வகையான இறப்பை நாம் அளிக்கப் போகிறோம்? பல மின்னணு சாதனங்களையும் வயர்களையும் இணைத்து, தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கையில் மரண வேதனையை அனுபவித்துத் தன்னந்தனியாகவே இறக்கட்டும் எனக் கைவிடப்போகிறோமா? அல்லது வீடுகளில் அவர்கள் விரும்பியவண்ணம் உறவினர்களும் நண்பர்களும் சூழ்ந்திருக்க, அமைதியாக மரணிக்க அனுமதி அளிக்கப் போகிறோமா?

## இந்தவார ராசிபலன் 21.07.2024 - 27.07.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆடி 05

நல்ல நேரம்: 09.01 - 10.31 ராகு காலம் : 4.31 - 06.01 திதி : பூரணை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எதிர்பார்த்த இடங்களில் இருந்து தனவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். நெருங்கிய நண்பர்களின் உதவிகள் கிடைக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் குழந்தைகளின் சீரான முன்னேற்றம் மனதில மகிழ்ச்சியை தோற்றுவிக்கும். உயர்ரக ஆடை ஆபரணங்கள் மற்றும் விரும்பிய பொருட்களெல்லாம் வீடு வந்து சேரும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழியும். பக்தியில் அதிக நாட்டம் ஏற்படும். விற்பனைப் பிரதிநிதிகளின் வாக்கு வன்மையால் பொருட்களின் விற்பனை சூடுபிடிக் கும். இரவு பயணங்களின் போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். தெய்வப் பிரார்த்தனையால், தாமதமான திருமணங்களும் தடபுடலாக நடக்கும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவிகள் அனைததும் தாமதமின்றி கிடைக்கும். வேலை தேடுபவர்களுக்கு, அவர்களின் திறமைக்கேற்ப நல்ல பணி கிடைக்கும். புதிய பதவிகள் கிடைத்து, அதற்கேற்ப அந்தஸ்தும் உயரும். அரசுப் பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், எதிரிகளின் கொட்டம் அடங்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். எந்த ஒரு காரியத்தையும் ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செயல்பட்டால் உன்னத நிலையை அடையலாம். மாணவர்கள் காலத்தை வீணாக்காமல் கருத்துடன் படித்துப் பெற்றோர்களுக்கு பெருமை சேர்க்க வேண்டும். அரசுப் பணிக்கான தேர்வுகளில் வெற்றி பெற்று, புதிய பதவிக்கான பணி உத்தரவை பெறுவர்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். தனவரவு அதிகரிக்கும். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும் மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் சிலருக்கு வீண் அலைச்சல்கள் ஏற்படும். அரசுப் பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். புகழும், கௌரவமும் உண்டாகும் வாரம்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் சுப காரியங்களுக்கு வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்குச் சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தானதர்மங்கள் செய்வார்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. உங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். புத்திர பாக்கியம் ஏற்படும். விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பார்கள். உங்களுக்குத் திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். அரசாங்கத்திடம் எதிர்பார்த்த அனு கூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திக்கை நோக்கிச் செல்லும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறுதல் ஆகியவற்றால் வரும் இன்பம் நிலைத்திருக்கும். தாங்கள் சகோதரரின் நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலூட்டும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்புத் தேவை. உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்னைகளுக்கு ஒரு முடிவு வரும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும் அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மூலம் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இராது. தொலைதூர செய்திகள் வர இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். உங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெண்களின் அறிவுத்திறன் கூடும். வியாபாரிகள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலும் ரணிலும்



வீரகத்தி தனபாலசிங்கம்

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்று இன்றுடன் சரியாக இரு வருடங்கள் நிறைவடைகின்றன. ஐக்கிய தேசிய கட்சியின் ஒரு இளம் பாராளுமன்ற உறுப்பினராக கம்பஹா மாவட்டத்தின் பியகம தொகுதியில் இருந்து தெரிவாகி சரியாக 45 வருடங்கள் நிறைவடைந்த தினத்திலேயே அவர் தன்னிடமிருந்து கால்நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக நழுவிக்கொண்டிருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை அடைந்தார். அது தற்செயலானதாக இருந்தாலும் கவனத்தை ஈர்த்த ஒரு அம்சம்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகவும் நீண்டகாலம் எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்ததை விக்கிரமசிங்க நிச்சயமாக ஒரு பெருமையாக கருதியிருக்கமாட்டார். அவரைப் போன்று அந்த கட்சியின் தலைவர் பதவியை வேறு எந்த அரசியல்வாதியும் நீண்ட காலம் வகித்ததும் இல்லை.

சுமார் 40 சதவீதமாக இருந்த கட்சியின் வாக்கு வங்கி விக்கிரசிங்கவின் சுமார் மூன்று தசாப்தகால தலைமைத்துவத்துக்கு பிறகு கடந்த பாராளுமன்ற தேர்தலில் இரண்டு சதவீதமாக குறைவடைந்தது. ஐ.தே.க. வில் இருந்து பாராளுமன்றத்துக்கு ஒரு உறுப்பினர் கூட தெரிவாகாத பரிதாப நிலலையை நாமெல்லோரும் கண்டோம். அந்த வரலாற்றுத் தோல்விக்கு பிறகு ஐ.தே.க.வை கலைத்துவிடலாமா என்று விக்கிரமசிங்க சிந்தித்ததாக நவீன் திசாநாயக்க ஒரு தடவை கூறியது நன்றாக நினைவிருக்கிறது.


நாடளாவிய ரீதியில் கட்சி பெற்ற மொத்த வாக்குகளின் அடிப்படையில் கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தைப் பயன்படுத்தி அதுவும் பத்து மாதங்கள் கழித்து மீண்டும் பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்த விக்கிரமசிங்க அதே பாராளுமன்றம் ஒரு வருடத்திற்கு பிறகு தன்னை ஜனாதிபதியாக தெரிவுசெய்யும் என்று கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கமாட்டார்.

அதேவேளை, அவரைத் தவிர வேறு எவரும் தனது கட்சியின் ஒற்றைப் பாராளுமன்ற உறுப்பினராக சபையில் இருந்துகொண்டு ஜனாதிபதியாக தெரிவாகியிருக்கவும் முடியாது. எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதி கோட்டாபயவின் அழைப்பை ஏற்று விக்கிரமசிங்கவுக்கு முன்னதாக பிரதமராக பதவியேற்றிருந்தாலும் கூட, பிறகு அவரை பாராளுமன்றம் ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்கு ராஜபக்சாக்கள் தங்கள் ஆதரவை வழங்கியிருப்பார்கள் என்று கூறமுடியாது.

ராஜபக்சாக்களை விக்கிரமசிங்க பாதுகாக்கிறாரோ இல்லையோ, அவரின் தலைமையில் ஒரு அரசாங்கம் தங்களை வேட்டையாடாது என்ற நம்பிக்கை அவர்களுக்கு நிச்சயமாக இருக்கிறது. தற்போதுகூட எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அவரை ஆதரிக்கும் தெரிவை இன்னமும் ராஜபக்சாக்கள் கைவிடவில்லை. அது தங்களுக்கு பாதுகாப்பான தெரிவு என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

எந்த தேர்தலையும் எந்த நேரத்திலும் எதிர்நோக்கத் தயார் என்றும் தங்களது சிறிலங்கா பொதுஜன பெரமுனவே மீண்டும் வெற்றிபெறும் என்றும் என்னதான் ராஜபக்சாக்கள் மார்தட்டிப் பேசினாலும், 'அறகலய' கிளர்ச்சிக்கு பின்னரான அரசியல் நிலைவரத்தில் மக்கள் மத்தியில் தங்களுக்கு இருக்கும் ஆதரவை மதிப்பிட முடியாத அளவுக்கு அவர்கள் அரசியல் அனுபவம் இல்லாதவர்கள் இல்லை. மக்கள் மத்தியில் ஒரு விதமான உளவியல் குழப்பத்தை ஏற்படுத்துவதே ராஜபக்சாக்கள் அவ்வாறு பேசுவதன் நோக்கமாக இருக்கலாம்.

தங்கள் கட்சியினால் தேர்தல்களில் வெற்றிபெற முடியும் என்றால் எதற்காக அவர்கள் ஒரு ராஜபக்சவை ஜனாதிபதி தேர்தலில் களமிறக்க விருப்பமில்லாமல் தனவந்தர் தம்மிக்க பெரேரா போன்றவர்களை முன்னிறுத்துகிறார்கள்? மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு தங்களது வாக்கு வங்கி எத்தகைய நிலையில் இருக்கிறது என்று பரீட்சித்துப் பார்ப்பதற்கு ராஜபக்சாக்களுக்கு தங்கள் குடும்ப உறுப்பினரைத் தவிர, வேறு ஒருவர் தேவைப்படுகிறார்.



பொதுஜன பெரமுன ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறக்கூடிய ஒரு பொதுவேட்பாளரை நிறுத்தும் என்று அதன் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கடந்த வாரம் கூறியிருந்தார். தற்போது பொதுவேட்பாளர் என்பதற்கு அர்த்தம் இல்லாமல் போய்விட்டது. விக்கிரமசிங்கவும் தன்னை பொது வேட்பாளர் என்கிறார்? தமிழர் தரப்பிலும் ஒரு பொது வேட்பாளர் குறித்து நீண்டநாட்களாக பேசப்பட்டு வருகிறது.

தங்களின் ஆதரவு இல்லாமல் எந்த வேட்பாளரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறமுடியாது என்றும் ராஜபக்சாக்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

ராஜபக்சாக்களை பொறுத்தவரை ஒன்றில் அவர்கள் ஆட்சிக்கு மீண்டும் வரவேண்டும் அல்லது கடந்த கால தவறுகளுக்காக தங்களைப் பொறுப்புக்கூற வைப்பதில் அக்கறை காட்டாதவர்கள் ஆட்சிக்கு வருவதை உறுதிசெய்ய வேண்டும். அதை அடிப்படையாகக் கொண்டே அவர்களின் வியூகங்கள் அமைகின்றன.

ஜனாதிபதி தேர்தலில் தங்களது கட்சியின் வேட்பாளரை நிறுத்தப்போவதாக ராஜபக்சாக்கள் அச்சுறுத்துவது தங்களது ஆதரவை நாடுகின்ற தரப்பிடமிருந்து தங்களின் நலன்களை உறுதிப்படுத்தக்கூடியதாக சாத்தியமானளவுக்கு அரசியல் பேரத்தைப் பேசுவதற்காகவேயாகும். இது விடயத்தில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவை தங்களுக்கு சாதகமான முறையில் மடக்குவது மிகவும் கஷ்டம் என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றால் தங்களுக்கு ஓரளவு அனுகூலமான சூழ்நிலை உருவாகலாம் என்று நினைத்த ராஜபக்சாக்கள் அது தொடர்பில் ஜனாதிபதி மீது பிரயோகித்த நெருக்குதல்கள் பயனளிக்கவில்லை. விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை, அவரது கட்சியின் தற்போதைய மிகவும் பலவீனமான நிலையில் பாராளுமன்ற தேர்தலை பற்றி நினைத்துப் பார்க்கவே முடியாது.

ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றால் மாத்திரமே ஐ.தே.க. மீட்சிபெறுவது குறித்து நம்பிக்கை கொள்ள முடியும். தனது கட்சியை மீளக் கட்டியெழுப்புவதில் உள்ள பிரச்சினைகளை விக்கிரமசிங்க நன்கு அறிவார். அதனால் தான் அவர் ஜனாதிபதி தேர்தலில் தனது கட்சியுடன் தன்னை அடையாளப்படுத்தாமல் சுயாதீனமான பொது வேட்பாளராக போட்டியிடுவது குறித்து பேசுகிறார்.

இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் கட்சித்தலைவர் ஒருவர் தனது கட்சியிடமிருந்து தன்னை தூர விலக்கிக்கொண்டு மற்றைய கட்சிகளைச் சேர்ந்தவர்களுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுவதற்கு திட்டம் தீட்டுவது இதுவே முதற்தடவையாகும்.

> **ஐக்கிய மக்கள் சக்தியுடன் தற்போது இருக்கும் சில தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும் தேர்தலில் எத்தகைய முடிவை எடுப்பது என்று தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள்**

அத்தகைய கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சியை ராஜபக்சாக்களின் கட்சியைச் சேர்ந்த சிலரைப் பயன்படுத்தி கடந்த வருடமே விக்கிரமசிங்க தொடங்கிய போதிலும் இதுவரையில் அதில் குறிப்பிடத்தக்க வெற்றியைக் காணமுடியவில்லை. ஆனால், பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த சில அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாக ஓரிரு பொதுக் கூட்டங்களை அண்மைக் காலத்தில் ஏற்பாடு செய்தார்கள். விக்கிரமசிங்கவை தவிர வேறு எந்த தலைவராலும் இலங்கையை அதன் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்கமுடியாது என்றும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடக்கூடிய தகுதியுடன் பொதுஜன பெரமுனவில் எவரும் இல்லை என்றும் அவர்கள் பகிரங்கமாக பேசுகிறார்கள்.

இந்த மாத இறுதியில் ஜனாதிபதி தேர்தல் குறித்த அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டவுடன் அதில் போட்டியிடப்போகும் தனது தீர்மானத்தை விக்கிரமசிங்க உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என்றும் அதையடுத்து அவரை ஆதரிக்கப் போகும் "மெகா கூட்டணி" உருவெடுக்கும் என்று கூறப்படுகிறது.

பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த அரசியல்வாதிகள் அந்த கூட்டணியில் கணிசமான எண்ணிக்கையில் சேருவார்களாக இருந்தால் ராஜபக்சாக்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குவர். விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்குவதற்கு அவருடன் பேரம் பேசமுடியாத நிலை ராஜபக்சாக்களுக்கு ஏற்படலாம்.

தேர்தல் அறிவிப்பு வெளியானதும் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் தன்னுடன் வந்து இணைவார்கள் என்றும் ஜனாதிபதி எதிர்பார்க்கிறார். ஐக்கிய மக்கள் சக்தியுடன் தற்போது இருக்கும் சில தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும் தேர்தலில் எத்தகைய முடிவை எடுப்பது என்று தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள் .

அடுத்த பாராளுமன்ற தேர்தலில் தங்களது வாய்ப்புகள் குறித்து அவர்கள் கரிசனை கொண்டிருப்பதே அந்த தடுமாற்றத்துக்கு காரணம். விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றி பெற்றாலும் கூட மிகவும் பலவீனமான நிலையில் இருக்கும் அவரது கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு தங்களது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றிக்கொள்ளமுடியுமா என்ற சந்தேகம் அவர்களுக்கு இருக்கிறது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்படுகின்ற பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மாத்திரமே தனது சாதனையாக விக்கிரமசிங்க முன்வைக்கிறார். கடந்த இரு வருடங்களில் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட சில சட்டங்கள் காரணமாக ஒரு லிபரல் ஜனநாயகவாதி என்று தனக்கு இருந்த படிமத்தையும் அவர் இழந்துவிட்டார்.

அவரைத் தவிர வேறு எவராவது ஜனாதிபதியாக வந்தால் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தடம்புரண்டு மீண்டும் பாரிய நெருக்கடி தோன்றும் என்று அவரைச் சார்ந்தவர்கள் ஒரு " மிரட்டல் பிரசாரத்தை" முன்னெடுக்கிறார்கள். இலங்கையின் வேறு எந்த அரசியல் தலைவருக்கும் இல்லாத சர்வதேச மதிப்பு விக்கிரமசிங்கவுக்கு இருக்கிறது என்றும் அவர்கள் அயராது கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதியும் அமைச்சர்களும் கூறுகின்றவற்றுக்கு புறம்பாக பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் இருக்கின்றன. இரு வருடங்களுக்கு முன்னரான நிலைவரத்தில் இருந்து வேறுபட்டதாக "வழமை நிலையின் சாயல்" ஒன்று காணப்படுகின்ற போதிலும், அதிகப் பெரும்பான்மையான சாதாரண மக்களைப் பொறுத்தவரை வாழ்க்கைச் செலவு சமாளிக்க முடியாததாகவே

(00ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வங்கதேசத்தில் பிரதமரின் பேச்சுக்கு பிறகு தீவிரவாகும் வன்முறை: 25 பேர் உயிரிழப்பு!

இட ஒதுக்கீட்டை ரத்து செய்ய வேண்டும் என கோரி வங்கதேசத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் போராட்டங்களில் இதுவரை 25க்கும் அதிகமானோர் இறந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

டாக்கா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 11 பேரின் உடல்கள் இருப்பதை மருத்துவமனை நிர்வாகம் உறுதி செய்துள்ளது. மேலும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

காவல்துறையினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் மோதல்கள் தீவிரமடைந்து வருவதால் ஆங்காங்கே வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன.

வங்கதேச அரசு, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இணைய வசதியை முடக்கியுள்ளது. மெட்ரோ ரயில்கள் உட்பட போக்குவரத்து சேவை பல்வேறு இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளது.




பள்ளிகள், கல்லூரிகள் காலவரையின்றி மூட அரசு உத்தரவிட்டுள்ளது. டாக்கா - சிட்டகாங் தேசிய நெடுஞ்சாலை மூடப்பட்டுள்ளதால் அங்கு ஏராளமான வாகனங்கள் சிக்கியுள்ளன. சட்டம் ஒழுங்கை பராமரிக்க 229 எல்லை பாதுகாப்பு வீரர் குழுக்கள் பணியில் உள்ளனர்.

**அரசு பணிகளில் இட ஒதுக்கீட்டுக்கு எதிர்ப்பு**

நாடு முழுவதும் போராட்டங்கள் ஓயாமல் நடைபெற்று வந்ததால், வங்கதேசத்தில் உள்ள இந்தியர்கள் தங்கள் பகுதியை விட்டு வெளியே செல்வதை குறைத்துக் கொள்ளுமாறு இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது. அமெரிக்க தூதரகம் மூடப்படுவதாக வியாழக கிழமை அறிவிக்கப்பட்டது.

1971-ம் ஆண்டு வங்கதேச விடுதலைப் போரில் பங்கேற்ற வீரர்களின் பிள்ளைகளுக்கு அரசு பணிகளில் வழங்கப்படும் இட ஒதுக்கீட்டை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி, மாணவர்கள் நாடு முழுவதும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



பாகிஸ்தானிடம் இருந்து வங்கதேச விடுதலைக்காக போரிட்ட வீரர்கள் 'முக்தி யோதா'க்கள் என என்றழைக்கப்படுகின்றனர். இவர்களின் பிள்ளைகளுக்கு மூன்றில் ஒரு பங்கு அரசு பணிகள் ஒதுக்கப்படுமென அரசு அறிவித்தது.

**போராட்டத்தை தீவிரப்படுத்திய பிரதமரின் பேச்சு**

வங்க தேச பிரதமர் ஷேக் ஹசினா புதன்கிழமை நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போது, அவர் என்ன கூறப் போகிறார் என நாடே உற்று நோக்கிக் கொண்டிருந்தது.

போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்த பிரதமர், தவறு இழைத்தவர்கள் கண்டிப்பாக தண்டிக்கப்படுவர் என்று உறுதி அளித்தார். மாணவர்கள் அமைதி காக்க வேண்டும் என்றும், நீதித்துறையின் மூலம் அவர்களுக்கு உரிய நியாயம் கிடைக்கும் என்றும் கூறினார்.

அவரது பேச்சைக் கேட்ட பிறகு, மாணவர்கள் தங்கள் போராட்டத்தை தீவிரப்படுத்தினர். நாடு தழுவிய கடையடைப்புக்கு அழைப்பு விடுத்தனர். பிரதமர் உரையை ஒளிபரப்பிய பிரிவி என்ற அரசு நடத்தும் தொலைக்காட்சி நிலையத்தில் மாணவர்கள் தீ வைத்தனர். தொலைக்காட்சி நிலையக் கட்டடத்தின் முன் பகுதிக்கு தீ வைக்கப்பட்டது. அந்நேரத்தில் தொலைக்காட்சி ஊழியர்கள் உள்ளே இருந்தநிலையில், அனைவரும் பத்திரமாக வெளியேறினர்

தலைநகரான டாக்காவில் உள்ள டாக்கா பல்கலைகழகம் மற்றும் பிற கல்வி நிறுவனங்களை சேர்ந்த மாணவர்கள் கடந்த ஒரு வாரமாகவே இட ஒதுக்கீட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள், கூட்டங்கள், பேரணிகள் நடத்தி வந்தனர்.

**வங்கதேசப் போராட்டத்தின் முகமாக மாறிய சுட்டுக் கொல்லப்பட்ட மாணவர்**

வங்கதேசத்தில் நடந்துவரும் மாணவர் போராட்டத்தின் முகமாக மாறியுள்ளார் அபு சயீத் என்ற பல்கலைக்கழக மாணவர். போராட்டத்தில் இரண்டு மாணவர் குழுக்கள் ஒன்றையொன்று செங்கற்கள் மற்றும் மூங்கில் கம்புகளால் தாக்கிக் கொண்டன. நாடு முழுவதும் நடந்த இந்த மோதல்களில் கொல்லப்பட்டவர்களில் 22 வயதான அபு சயீதும் ஒருவர். இந்தப் பேரணிகளைக் கலைக்க போலீசார் கண்ணீர்ப்புகை மற்றும் ரப்பர் தோட்டாக்களை பயன்படுத்தினர்.

சமூக ஊடகங்களில் பரவி வரும் ஒரு புகைப்படம், வங்கதேசக் காவல் துறையை எதிர்கொள்ளும் போது, அபு சயீத் தனது கைகளை உயர்த்துவதைக் காட்டுகிறது.

சயீத்தின் மரணத்திற்கு காவல் துறையே காரணம் என அவரது குடும்பத்தினர் கூறுகின்றனர். இந்தக் குற்றச்சட்டு அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டு வருகிறது.

வங்கதேசத்தின் வடமேற்கு நகரமான ரங்பூரின் போலீஸ் கமிஷனரான முகமது மோனிருஸ்ஸமான் பேசினார். அபு சயீதின் மரணம் குறித்து போலீசார் ஏற்கனவே விசாரணையைத் தொடங்கியுள்ளனர், என்று அவர் கூறினார்.

போராட்டங்களில் 6 பேர் கொல்லப்பட்டதற்குக் காரணமானவர்களைத் தண்டிப்பதாக வங்கதேசப் பிரதமர் ஷேக் ஹசீனா புதன்கிழமை உறுதியளித்தார்.

பல நாட்கள் நடந்த போராட்டங்களுக்குப் பிறகு, சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்க, அதிகாரிகள் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான ராணுவ வீரர்களை பணியில் அமர்த்தியுள்ளனர்.

**சயீதுக்கு என்ன ஆனது?**

இந்தச் சம்பவம் தொடர்பாக வலம்வரும் ஒரு வீடியோவில், போலீசார் திடீரென ரப்பர் தோட்டாக்களைச் சுடத் தொடங்கும் போது, சயீத் நடுரோட்டில் நிற்பதைக் காணலாம். அப்போது சயீத், கையில் ஒரு குச்சியைப் பிடித்தபடி தோட்டாவிலிருந்து ஒதுங்க முயல்கிறார். அவர் பல அடிகள் பின்னோக்கி நடந்து, சாலையின் மையத்திலுள்ள தடுப்புகளைக் கடந்து, தரையில் விழுகிறார். ரப்பர் தோட்டாக்களால் காயமடைந்த சயீத், மருத்துவமனையில் உயிரிழந்ததாக மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர். சமூக ஊடகங்களில் பரவி வரும் சில வீடியோக்களில் சயீத் வன்முறையாகவோ, ஆக்ரோஷமாகவோ நடந்து கொள்வதுபோலத் தெரியவில்லை.

**பல்கலைக்கழக பட்டம் பெற்ற ஒரே குழந்தை**

ஏழ்மையான குடும்பத்தில் வளர்ந்த சயீத், அரசு வேலை கிடைக்கும் என்ற கனவில் இருந்தார். ரங்பூர் நகரில் உள்ள பேகம் ரோகியா பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியம் படிக்கும் மாணவரான இவர், வங்கதேசத்தின் தேசியக் கொடியை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டார்.

அபு சயீதுக்கு உடன்பிறந்த ஒன்பது சகோதர சகோதரிகள் உள்ளனர். மேலும், அவரது குடும்ப உறுப்பினரில் அவர் ஒருவர் மட்டுமே பல்கலைக்கழகம் வரை சென்றுள்ளார்.

அவரது இளைய சகோதரிகளில் ஒருவரான சுமி அக்தர், அவரது சகோதரர் பட்டப்படிப்பை முடிந்தவுடன் அவருக்கு அரசாங்க வேலை கிடைக்கும் என்று அவர்கள் நம்பிக்கொண்டிருந்ததாகக் கூறினார். அவர், தனது சகோதரரின் மரணத் துக்கு காவல்துறை தான் காரணம் என்று குற்றம்சாட்டினார்.

"அவர் கையில் ஆயுதம் எதுவும் இல்லை. அவர் நாட்டின் தேசியக் கொடியை வைத்திருந்தார்," என்று அவர் கூறினார்.

போராட்டக்காரர்களுக்கு கடுமையான முறையில் பதிலடி கொடுத்த காவல்துறையை மனித உரிமை ஆர்வலர்களும் விமர்சித்து வருகின்றனர்.

"ஒருவரின் கருத்தை வெளிப்படுத்துவது, கிளர்ச்சி செய்வது - இவை குடிமக்களின் ஜனநாயக உரிமைகள், அவை நமது அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன," என்று மனித உரிமைகள் அமைப்பான சட்டம் மற்றும் நடுவர் மையத்தின் நிர்வாக இயக்குநர் பரூக் பைசல் தெரிவித்தார்.


"அங்கு போராட்டம் நடத்திய நிராயுதபாணி மாணவர்கள் மீது போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியது ஏன்? அந்த இளைஞரிடம் கொடிய ஆயுதம் எதுவும் இல்லை. அதனால் போலீசார் வன்முறையில் ஈடுபட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை," என்று அவர் கூறினார்.

**தகுதி அடிப்படையில் ஆட்சேர்ப்பு**

போர் வீரர்களின் உறவினர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஒதுக்கும் முறை பாரபட்சமானது என்றும், தகுதியின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும் என்றும் போராடும் மாணவர்கள் கூறுகின்றனர்.

சில வேலைகள் பெண்கள், சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. வங்கதேசத்தில் உள்ள அரசாங்க வேலைகள், தனியார் துறை வேலைகளுடன் ஒப்பிடும்போது நல்ல ஊதியம் வழங்குகின்றன. பாதுகாப்பான ஓய்வூதிய பலன்களையும் வழங்குகின்றன.

வங்கதேசப் பிரதமர் ஷேக் ஹசீனா,



இந்தக் கொலைகளைக் கண்டித்து, குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால், அரசாங்க வேலைகளைத் தனது விசுவாசிகளுக்கு ஒதுக்குவதற்காக ஷேக் ஹசீனா இட ஒதுக்கீட்டுத் திட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாகப் போராட்டக்காரர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

"ஒவ்வொரு கொலையையும் நான் கண்டிக்கிறேன்," என்று புதன்கிழமை மாலை தொலைக்காட்சியில் உரையாற்றிய ஷேக் ஹசீனா கூறினார். போலீஸ் படைகளுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல்களுக்கு நடந்து ஒருநாள் கழித்து அவர் இந்த உரையை ஆற்றினார்.

"கொலை, கொள்ளை மற்றும் வன்முறையில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படுவதை உறுதி செய்வேன் என்று தீர்க்கமாக அறிவிக்கிறேன்," என்று அவர் தனது உரையில் தெரிவித்தார்.

ஜூலை 17ல் நடந்த ஒரு செய்தியாளர் சந்திப்பில், பிரதமர் ஹசீனா வேலை ஒதுக்கீட்டை எதிர்ப்பவர்களை 'ரஜாக்கர்' என்று விமர்சித்தார். ரஜாக்கர் என்பது 1971 போரின் போது பாகிஸ்தான் ராணுவத்துடன் ஒத்துழைத்தவர்களைக் குறிக்கும் சொல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறைபடிந்த கறுப்பு யூலை

## ஜனாதிபதி தேர்தல் பெயரால் சிங்கள தேசத்தை புரட்டுகிறது!

**பனங்காட்டான்**



பிறந்திருக்கும் யூலையின் கடைசி வாரம் இலங்கை அரசியல் வரலாற்றில் கொடூரமான கறைபடிந்த நாட்களைக் கொண்டது. கறுப்பு யூலை என்று சொன்னதும் 1983 யூலை மாத தமிழினப் படுகொலை நினைவுக்கு வரும்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று கடந்த வாரம் குறிப்பிட்டது போன்று இலங்கை அரசின் தவறான செயற்பாடுகளுக்காக இழிபுகழ் பெற்ற மாதமாக யூலை பதிவு பெற்றுள்ளது. இது பெரும்பான்மையினரான சிங்களவரின் வரலாற்றில் இருண்ட அடையாளமென அந்தப் பத்திரிகைக் கட்டுரை குறிப்பிட்டுள்ளது.

1956ல் காலிமுகத்திடலில் சாத்வீகப் போராட்டம் நடத்திய தமிழர்களுக்கு எதிராக அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் குண்டர்கள் ஆரம்பித்து வைத்த இனரீதியான தாக்குதல் 1958, 1977 என்று தொடர்ந்து, 1983ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் தர்மிக்ஷ்டர் என அழைக்கப்பட்ட அவரது ஆசிர்வாதத்துடன் கோரத்தாண்டவம் ஆடி, இனப்படுகொலை என்று உலகுக்கு அடையாளப்படுத்தியது.

1983 யூலை 23இல் சிறீலங்கா ராணுவத்தினர் 13 பேர் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் கொல்லப்பட்டதை காரணமாக்கி, ஏற்கனவே நன்கு திட்டமிட்டிருந்த தமிழினப் படுகொலையை ஜெயவர்த்தன அரசு அரங்கேற்றியது. இவ்வாறான மிலேச்சத்தனமான முடிவை எட்டுவதற்கு ஜெயவர்த்தன திட்டமிட்டு காத்திருந்தார் என்பதை லண்டன் ரெலிகிராப் பத்திரிகைக்கு அந்த மாத முற்பகுதியில் அவர் வழங்கிய செவ்வியில் அவர் குறிப்பிட்ட வார்த்தைகள் நேரடிச் சாட்சி.

'Really, if I starve the Tamil people out, the Sinhala people will be happy' (உண்மையாக, தமிழ் மக்களை நான் பட்டினி போடுவேன் என்றால், சிங்கள மக்கள் மகிழ்ச்சியடைவர்) என்று முழு நாட்டுக்கும் தாமே ஜனாதிபதி என்று கூறிய ஒருவர் ஒரு இனத்தை பட்டினி போட்டு இன்னொரு இனத்தை மகிழ்ச்சியடைய வைக்கக்கூடியவர் என்றால், அவர் எவ்வாறானவர் என்பதை புரிந்து கொள்ள நேரமெடுக்காது.

தமிழினப் படுகொலைக்காக காத்திருந்த சிங்களப் படையினரையும், சிங்கள பௌத்த வெறியர்களையும், இவர்களுக்குத் துணைபோக நின்ற அரசியல்வாதிகளையும் எவ்வளவு தூரத்துக்கு ஜெயவர்த்தனவின் சொல்லாடல் உசுப்பேற்றியது என்பதை ஒரு வாரமாக காண முடிந்தது.

இதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் சென்று தெற்காசியாவின் புகழ்பெற்ற பொதுநூலகத்தை காவற்படையினர் மூலம் தீக்கிரையாக்கிய அமைச்சர்கள் சிறில் மத்தியு, காமினி திசநாயக்க ஆகியோர் மீது ஜெயவர்த்தன நடவடிக்கை எடுத்திருப்பாரானால், யூலை இனப்படுகொலை முழு வீச்சுப் பெற்றிருக்காது என்பது சர்வதேசத்தின் கருத்து.

அன்றைய பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர், பிரதம நீதியரசர் ஆகியோர் தமிழர்களாக இருந்தும் அவர்களால் கூட இனப்படுகொலையை தடுக்க முடியாது போனது. இதனை தமக்குச் சாதகமாக்க முனைந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆகஸ்ட் முதல் வாரம் ராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றிய போது - சட்டம், ஒழுங்கு, நீதி பரிபாலனம் ஆகியவற்றுக்கு பொறுப்பாக தமிழர்களை எனது அரசில் வைத்துக் கொண்டு தமிழரைப் படுகொலை செய்ய நான் எண்ணியிருப்பேனா என்று கேட்டு முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயன்றது நகைப்புக்கிடமானது.

யூலை 23ல் தமிழருக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல்களை தடுப்பதற்கு உடனடியாக ஊரடங்குச் சட்டத்தை பிறப்பிக்க அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. அகதி முகாம்களை உருவாக்கவும் நான்கு நாட்கள் கடந்தது. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் சிறப்புத் தூதுவராக நரசிம்மராவ் விஜயம் மேற்கொண்ட வேளையிலேயே சில நடவடிக்கைகளை இவர் எடுக்க தள்ளப்பட்டார்.

ஏறத்தாழ நாலாயிரம் வரையான தமிழர் கொல்லப்பட்டனர். ஐயாயிரம் வரையான தமிழர்களின் வணிக நிறுவனங்களும் பதினெண்ணாயிரம் வரையான வீடுகளும் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. ஒரு லட்சத்து முப்பதினாயிரம் வரையானவர்கள் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்தனர். சுமார் ஒன்றரை லட்சம் வரையானவர்கள் இடப்பெயர்வுக்கு உள்ளாகினர் (இப் பத்தியாளரும் அவரது குடும்பமும் இதற்குள் அடங்குவர்).

அத்துருகிரிய என்ற இடத்தில் அமைந்திருந்த அமைச்சர் சிறில் மத்தியுவின் கீழான அரசாங்க உருக்குக் கூட்டுத்தாபனத்தில் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு தயார் நிலையிலிருந்த பாரிய கத்திகள், வாள்கள், இரும்புக் குழாய்களை கையில் ஏந்தியவாறு, வாக்காளர் பதிவுப் பட்டியலால் அடையாளம் காணப்பட்ட தமிழர்களின் இருப்பிடங்கள் அடித்து நொருக்கப்பட்டன. அப்பாவி மக்களைப் பாதுகாக்க வேண்டிய ஆயுதப் படையினர் குண்டர்களுக்கு ஆதரவு வழங்கி ஊக்கப்படுத்தினர் என்பதை சர்வதேச நிறுவனங்கள் தங்கள் அறிக்கைகளில் சுட்டியுள்ளன.

1983 யூலையில் ஆரம்பமான இரு இனங்களதும் விரிசல் சுமார் இரண்டரை தசாப்த கால யுத்தமாக நீண்டதால் தமிழின அழிப்பு ஒருபுறத்தில் இடம்பெற மறுபுறத்தில் இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் போனது. மோசமான நிதி நெருக்கடியைச் சந்தித்ததால் இந்து சமுத்திர பிராந்தியத்தில் மிகவும் வறிய [illegible] ளப்படுத்தப்பட்டதாக கொழும்பின் டெய்லி மிறர் பத்திரிகை கடந்த வாரம் தெரிவித்தது முக்கியமானது.

யுத்த வெற்றிச் செருக்கில் மிதந்த ராஜபக்ச குடும்பம் சிங்கள மக்களின் மனோநிலையை சாதகமாக்கி தங்களின் ஆட்சியைத் தக்கவைத்தவாறு கோடானு கோடி நிதி மோசடிகளில் ஈடுபட்டதன்

**தர்மிஷ்டரின் ஆசிர்வாதத்துடன் கட்டவிழ்க்கப்பட்ட தமிழினப் படுகொலையால் கறுப்பு யூலை சர்வதேசப் புகழ்பெற்றது. இந்த வாரத்தில் ஜனாதிபதி தேர்தல் திகதி அறிவிக்கப்படுமென எதிர்பார்த்திருக்க, 22வது அரசியல் திருத்தம் என்ற பெயரில் அரங்கேறும் அகங்கார அரசியல் அனைவரின் முன்னாலும் கேள்விக்குறியாக நிற்கிறது.**

விளைவாகவே அறகலய உருவானது. அலங்கார அரசியலில் ஈடுபட்டவர்கள் தப்பியோட, அகங்கார அரசியல் வாரிசான ரணில் விக்கிரமசிங்க கட்சிக் கட்டிலில் ஏறும் வாய்ப்புக் கிடைத்தது. அதன் தொடராகவே இந்நாட்களில் பேசப்படும் ஜனாதிபதித் தேர்தலையும், இருபத்திரண்டாவது அரசியலமைப்பு திருத்த முயற்சியையும் கட்சிகளுக்கிடையே ஏற்படுத்தப்படும் பிளவுகளையும் நோக்க வேண்டும்.

எதிர்வரும் அக்டோபரில் இடம்பெறுமென நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில், சஜித், அநுர ஆகிய மூவரும் போட்டியிடுவது நிச்சயமாகியுள்ளது. இவர்கள் மூவருடனும் கறுப்பு யூலை என்பது ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டது. அவ்வேளையில் [illegible] அரசில் அமைச்சராக விருந்தவர் அவரது பெறாமகன் முறையான ரணில். அதே ஆட்சியில் பிரதமராகவிருந்த ரணசிங்க பிரேமதாசவின் மகன் சஜித். கறுப்பு யூலையின் சூத்திரதாரிகள் என்று சொல்லி ஜெயவர்த்தனவினால் தடைசெய்யப் பட்ட ஜே.வி.பி.யின் வேட்பாளர் அநுர.

ஆக, தமிழின அழிப்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டவர்களின் வாரிசுகளாக இவர்கள் மூவரையும் தமிழ் மக்கள் பார்க்கிறார் கள். ஆனால், இந்த மூவரும் தமிழரின் வாக்குகளை நாடி தமிழர் தாயகத்தை நோக்கி வலம்வருகிறார்கள். எதனையும் இலகுவாக மறந்துவிடும் தமிழ்ச் சமூகம் இவர்களை வரவேற்று ஆரத்தி எடுத்து, பொட்டிட்டு, மலர் மாலை சூட்டி வரவேற்பதில் காட்டும் ஆர்வம் வரவேற்கக்கூடியதன்று.

இந்த நிகழ்வுகளின் மறுபக்கமாக ரணிலின் கிளித்தட்டு அரசியல் அவரது கட்சிக்காரர்களை மட்டுமன்றி எதிராளிகளையும் விழி பிதுங்க வைக்கிறது. அறிவிக்கப்பட்டவாறு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமென்று கூறியபடி, தாம் போட்டியிடுவதை சுற்றி வளைத்து தெரியப்படுத்திக் கொண்டு நாட்டின் பல முனைகளுக்கும் நிவாரண உதவிப் பயணங்களை மேற்கொண்டு வருகிறார். இது தேர்தல் பரப்புரைதான். சமகாலத்தில் தம்மைக் கதிரையில் அமர்த்திக் காத்துவரும் பொதுஜன பெரமுனவுக்கு சவால் விடும் வகையிலும் சில நகர்வுகளை மேற்கொள்கிறார்.

இன்னொரு புறத்தே அரசியலமைப்பின் 22வது திருத்தத்தை அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டு நாடாளுமன்றம் கொண்டு செல்லும் முயற்சியிலும் தீவிரமாக உள்ளார். ஜனாதிபதியின் ஒரு தவணைக்கான காலத்தை ஐந்து வருடங்களாக நிர்ணயிப்பது இத்திருத்தம். இத்திருத்தத்தை அமைச்சரவையில் ஏற்றுக் கொண்ட நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச முரண்பட்ட நிலையில் காணப்படுகிறார். இதனை வர்த்தமானியில் பிரசுரிக்கக்கூடாதென தமது அமைச்சின் செயலாளருக்கு இவர் உத்தரவிட்டதான செய்தி பத்திரிகைகளில் வெளிவந்த மை காய்வதற்கு முன்னர், தமக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி வர்த்தமானியில் பிரசுரித்துள்ளார் ரணில் விக்கிரமசிங்க. இதே போக்கையே இப்போது மகிந்த தரப்புடனும் மேற்கொண்டு வருகிறார்.

22ம் திருத்தச் சட்டத்தை வர்த்தமானியில் பிரசுரித்ததால் ஜனாதிபதி தேர்தலுக்கு எந்த தடையும் இல்லையென தேர்தல் ஆணையாளர் நாயகம் சிறீரத்நாயக்க தெரிவித்துள்ளார். இத்திருத்தம் தொடர்பாக எவரும் எவ்விதத்திலும் அச்சமடையத் தேவையில்லை என்று ரணில் விக்கிரமசிங்கவும் தெரிவித்துள்ளார். இவற்றை வழிமொழிவதுபோல இந்த வார நாடாளுமன்ற அமர்வில் 22வது திருத்தம் சமர்ப்பிக்கப்பட மாட்டாது என்று அமைச்சர் அமரவீரவும் தெரிவித்துள்ளார்.

ஆனால், இவை எதனையும் நம்பும் நிலையில் எதிரணியினர் எவரும் இல்லை. தேர்தலுக்கான திகதியை அறிவிப்பதற்கான அதிகாரம் கடந்த புதன்கிழமை 17ம் திகதி தேர்தல் ஆணையகத்துக்கு வந்துள்ளது. ஆனால், இது வரை தேர்தல் ஆணையகம் அறிவிக்கவில்லை. இந்த வாரத்தில் வரலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் 22வது திருத்தம் இடையில் புகுந்து எல்லோர் முன்னாலும் பெரும் கேள்விக்குறியை எழுப்பியுள்ளது. 1983ல் சிங்கள தேசம் வித்திட்ட கறுப்பு யூலை இப்போது அவர்களையே சுற்றிவளைத்து சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கிறது. இதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது தங்களின் பொதுவேட்பாளரை விரைவில் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு தமிழர்களுக்கானது. •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி வைத்தியசாலையைக் காப்பாற்ற வெளிநாட்டில் வசிக்கும் தென்மராட்சியைச் சேர்ந்த வைத்தியர்கள் முன்வரவேண்டும்!

**டாக்டர் முரளி வல்லிபுரநாதன்**
(சமுதாய மருத்துவ நிபுணர்)

சாவகச்சேரி வைத்தியசாலை ஏன் அபிவிருத்தி செய்யப்படவில்லை என்ப தைப் பற்றி கடந்த காலத்தில் சுகாதார அமைச்சின் திட்டமிடல் பிரிவின் சிரேஷ்ட மருத்துவ நிபுணராக கடமை ஆற்றியவர் என்ற வகையில் ஆராய்ந்து கொண்டிருக்கிறேன்.

இரு தசாப்தங்களுக்கு முன்னரேயே சாவகச்சேரி வைத்தியசாலை ஆதார வைத்தியசாலை வகை "பி" என அடையாளப்படுத்தப்பட்டு இருந்தது. வகை "பி" வைத்தியசாலை ஒன்றில் இருக்க வேண்டிய அடிப்படை வசதிகள் இத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணையில் காணப்படுகின்றன. இதில் குறிப்பிட்டுள்ள வசதிகளில் முக்கியமாகச் சத்திர சிகிச்சைக் கூடம், மற்றும் அதி தீவிர சிகிச்சை பிரிவு ஆகிய பௌதீக மற்றும் சத்திர சிகிச்சை நிபுணர் ஆளணி வளங்கள் ஆகியன சாவகச்சேரி வைத்திய சாலையில் காணப்படவில்லை என்பது முக்கியமான குறைபாடாக உள்ளது. இவை அனைத்தையும் முழுமையாக இயக்குவதற்கு தற்போதுள்ள ஆளணியான 25 மருத்துவர்கள் போதாது என்பதையும் நாம் கருத்தில் எடுக்க வேண்டும்.



எவ்வாறு இந்த இழிநிலை ஏற்பட்டது என்று ஆராய்ந்தால் 2009 வரை போர் நடக்கும் காலத்தில் வட பகுதி வைத்தியசாலைகள் அனைத்தும் அபிவிருத்தி செய்யப்படாமல் இருந்தன என்பதும், அதன் பின்னர் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்கள் அபிவிருத்திக்குரிய அழுத்தங்களை பிரயோகிக்காததால் 2010-2018 வரை மந்த கதியிலேயே அபிவிருத்திகள் இடம் பெற்றன என்பதும் வெளிப்படை.

இப்போது தேர்தல் காலம் நெருங்கி விட்டதால் அனைத்து அரசியல்வாதிகளும் வாக்குகளுக்காகச் சாவகச்சேரி வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதாகப் "படம்" போடுகிறார்கள். இவர்களில் சிலர் கடந்த காலத்தில் வைத்தியர்களிடம் கப்பம் கேட்டு அவர்களை நாட்டை விட்டுத் துரத்தியவர்கள் என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

**ஊர் வைத்தியர்களும் பாத்திரவாளிகளே**

2019 கோவிட், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார வங்குரோத்து ஆகியவற்றால் இலங்கை முழுமையும் வைத்தியசாலைகளின் அபிவிருத்தி தாமதப்பட்டு இருந்தது. பின்னர் வந்த ரணில் அரசாங்கம் பொருளாதார நிலையில் இருந்து நாட்டை மீட்டதாக உரிமை கோரினாலும் அதிகரித்த வரிகளை விதித்து வைத்தியர்களையும், வைத்திய நிபுணர்களையும் நாட்டை விட்டு ஆயிரக்கணக்கில் வெளியேறும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய நிலையில் ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு மருத்துவ நிபுணரும், சராசரியாக மூன்று மருத்துவர்களும் நாட்டை விட்டு வெளியேறுவதைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

குறிப்பாகப் பெருமளவு சத்திர சிகிச்சை நிபுணர்கள், மயக்கமருந்தியல் நிபுணர்கள், மற்றும் குழந்தை வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், பெரிய வைத்தியசாலைகளே சத்திரசிகிச்சை நிபுணர்கள் தட்டுப்பாடு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அண்மைக்காலத்தில் சாவகச்சேரிக்குக் குறித்த நிபுணர்களை நியமிப்பது குதிரைக்கொம்பாகவே இருக்கப்போகிறது.

எனவே இந்த இழிநிலை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு ஏற்பட்டதற்கு, தென்மராட்சியில் இருந்து வெளியேறிய மருத்துவர்களும் ஒரு காரணம் என்பதை அவர்கள் நேர்மையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**படம் போடுவோர்**

அதே நேரம் சமூக ஊடகங்களில் "படம்" போடுவோரால் எந்த நிரந்தர மாற்றமும் சாவகச்சேரியில் நிகழப்போவதில்லை. இவர்கள் பொழுதுபோக்குக்காகக் "கமெண்ட்ஸ்" போடுவார்கள். மற்றப்படி தமது யூரியூப் வியாபாரத்தைப் பெருக்குவார்களே தவிர உருப்படியான எதையும் செய்யப் போவது இல்லை. இதைவிட மருத்துவர்களைக் குறை சொல்வோர் தமது பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பிக் கொண்டு வைத்தியர்கள் மாத்திரம் இலங்கையில் இருக்க வேண்டும் என்று குதர்க்கம் பேசுவார்கள்.

கடந்த காலங்களில் இடம் பெற்றதாக கூறப்படும் தவறான முகாமைத்துவம் மூலம் நோயாளிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டு இருந்தாலும் அதற்குரிய நிவாரணமும் முகநூல் பதிவுகளினால் கிடைக்கப் போவதும் இல்லை.

**நடைமுறைச் சாத்தியம்**

காலி முதலான தென் பகுதியில் வசிக்கும் வைத்தியர்களைக் கட்டாயப்படுத்திச் சாவகச்சேரியில் வேலை செய்ய வைத்தால் அவர்களும் மனிதப் பிறவிகளாக வீட்டுக்குப் போகத் துடிப்பார்கள் மேலும் சாவகச்சேரியின் அபிவிருத்தியில் அவர்களுக்கு ஆர்வமும் இருக்காது. மக்களுக்கு வைத்தியர்களோடு நேரடியாக உரையாடுவதற்கும் முடியாது.

மேலும் தற்போதைய அரசாங்கத்தின் சம்பளக் கொள்கையின் படி- சர்வதேச நாணய நிதியத்தின் கட்டுப்பாடுகளை மீறி- அண்மைக் காலத்தில் வைத்திய சாலைகளில் தற்போது உள்ள ஆளணியை எவரும் அதிகரிக்கப் போவதில்லை.

எனவே தென்மராட்சியைச் சேர்ந்த பல வைத்தியர்களும், வைத்திய நிபுணர்களும் வெளிநாட்டில் வசதியாக இருந்து கொண்டு, "நாங்கள் 50 பவுண் அனுப்பினோம், 100 டொலர் அனுப்பினோம் ஏன் இன்னமும் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யவில்லை?" என்று சமூக ஊடகங்களில் கேட்பதை விடுத்து, உங்களுடைய ஊர் வைத்தியசாலையில் சிறிது காலம் வேலை செய்யலாம் அல்லவா?

குறிப்பாக இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இலவச மருத்துவக் கல்வியைப் பயின்ற பின்னர் இப்போது வெளிநாடுகளில் வேலை செய்யும் தென்மராட்சியைச் சேர்ந்த மருத்துவர்களும் சத்திர சிகிச்சை நிபுணர்கள் உள்ளிட்ட விசேட வைத்திய நிபுணர்களும் சிறிது காலமாவது சாவகச்சேரியில் வேலை செய்ய முன்வரவேண்டும்.

ஏனைய மாவட்டங்களில் யுத்த காலத்திலும் அதற்கு பின்னரும் பல வைத்தியர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் தமது சொந்த மண்ணை அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாட்டில் இருந்து வந்து சுகாதார அமைச்சின் அனுமதியுடன் அரசாங்க வைத்தியசாலைகளில் வேலை செய்திருக்கிறார்கள். எனவே நான் முன்மொழிவது புதிய ஒரு விடயம் அல்ல.

மேலும் "நாங்கள் அனுப்பிய நிதிக்கு என்ன நடந்தது?" என்று மற்றவர்களைக் கேள்வி கேட்பதை விடுத்து, மருத்துவர் அல்லாதோரிடம் நிதியை சேகரிக்கும் பணியைக் கையளித்துவிட்டு, நீங்கள் நேரடியாகவே வந்து உங்கள் பார்வையின் கீழ் நிதியைப் பயனுள்ள விடயங்களுக்குச் செலவழிக்கவும் முடியும்.

**கோரிக்கை**

எனது பணிவான கோரிக்கை ஒவ்வொரு தென்மராட்சியைச் சேர்ந்த வெளிநாட்டில் வேலை செய்யும் வைத்தியரும் மூன்று மாதம் ஆவது சாவகச்சேரியில் வந்து வேலை செய்தால் தற்போதைய நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையை அதற்குரிய வசதிகளுடன் விரைவாக இயங்க வைக்க முடியும்.

இதை விடுத்து "கடந்த காலத்தில் என்ன நடந்தது?" என்று மற்றவர்களைக் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதால் எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை. முகநூல் போராளிகளுக்கு நான் கூற விரும்புவது உங்களுடைய குற்றசாட்டுகளை உண்மையான "ப்ரொபைல்" மூலம் ஆதாரத்துடன் வெளியிடுங்கள். ஆனால் அது மட்டும் மாற்றத்தை எற்படுத்தாது. சமாந்தரமாகச் சட்ட மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மிகவும் அவசியம்.

தற்போது உள்ள கேள்வி சாவகச்சேரியை சேர்ந்த வெளிநாட்டு வைத்தியர்கள் எனது கோரிக்கையை சவாலுக்கு உட்படுத்தப் போகிறார்களா அல்லது ஏனைய மாவட்ட வைத்தியர்களை போலத் தியாகத்தை செய்ய முன்வருவார்களா என்பது தான்? ●

**Facilities offered at Type B Base Hospitals**

The proposed facilities for Type B Base Hospitals are as follows:

1. Out Patient Department with separate Preliminary Care Unit, Accident and Emergency Care Unit, Oral Health Unit and Healthy Lifestyle Center
2. Clinic facilities
3. In ward facilities
   - 1+1 Medical Unit - Consultants 1+1
   - 1+1 Surgical Unit - Consultants 1+1
   - 1+1 Obstetrics & Gynaecology Unit - Consultants 1+1
   - 1+1 Paediatric Unit - Consultants 1+1
   - 1 Anaesthesia Unit
   - 1 Psychiatry Unit
   - 1 Eye Surgical Unit

   (Second post can be filled after filling the first post in all Type B Base Hospitals)
4. Intensive Care Unit
5. Operation Theatres — One theatre complex comprising of 1 theatre for gynaecology and surgery a separate eye theatre and a theatre table for caesarean sections and a theatre table for casualties
6. Diagnostic Services
   - Radiology Unit – 1 Radiologist
   - Pathology Unit with 1 Histopathology Unit
7. Dermatology Unit
8. Pharmacy
9. Blood Bank
10. Medical Records Unit/ Health Information Management Unit
11. Planning Unit
12. Quality Management Unit
13. Health Promotion Unit
14. Infection Control Unit


1 Nephrology Unit for BHB Padaviya, BHB Kebithigolleva, BHB Welikanda, BHB Hingurakgoda, BHB Galgamuwa, BHB Polpithigama, BHB Medirigiriya and BHB Medawachchiya depending upon the service requirement.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லதோர் வீணை செய்து அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ?

கந்தையா அருந்தவபாலன்

கடந்த வாரம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையை மையங் கொண்டு கடுங்காற்றுடன் கூடிய கன மழை பெய்து ஓய்ந்துவிட்டது. சென்ற மாதம் 14ஆந்திகதி குறித்த வைத்திய சாலைக்கு பதில் வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்ட வைத்தியர் இராம நாதன் அரச்சுனா அவ்வைத்தியசாலை யில் அதிரடியாக பல மாற்றங்களைச் செய்தமை, அதனை எதிர்த்து வைத்தி யர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட் டமை, தன்கீழ் பணிபுரியும் வைத்தியர் கள் உட்பட பிராந்திய சுகாதாரப் பணிப் பாளர், யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எனப் பலர்மீதான குற்றச் சாட்டுகளை பொதுவெளியில் அடுக் கடுக்காக முன்வைத்து பொதுமக்கள் மத்தியில் தனக்கான ஆதரவுத்தள மொன்றை கட்டியெழுப்பியமை, இவ ரால் பொதுவெளியில் குற்றஞ் சாட் டப்பட்ட ஒருவரின் முறைப்பாட்டின் அடிப்படையில் இம்மாதம் 7ஆந் திகதி முன்னிரவு விசாரணைக்காக காவல் நிலையம் வருமாறு கூறும் அழைப் பாணையை ஏற்க மறுத்தமை, இதனை தன்னைக் கைது செய்யும் ஒரு முற்சி யாகச் சித்தரித்து அவர் முகநூலூடாக தெரிவிக்க அவருக்கு ஆதரவாக வைத் தியசாலை முன்னால் அன்றிரவிலிருந்து அடுத்தநாள் அவர் கொழும்புக்குப் புறப் படும்வரை மக்கள் ஒன்று கூடி ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டமை, சமகாலத்தில் அவரது இடத்துக்குப் பதில் வைத்திய அட்சகராக வைத்தியர் ராஜீவ் நியமிக் கப்பட்டு மாகாண, பிராந்திய பணிப் பாளர் சகிதம் வருகைதந்து பணியைப் பொறுப்பேற்றமை, கொழும்பு சென்ற வைத்தியர் அரச்சுனா மீண்டும் 15ஆந் திகதி தனது முகநூல் நேரலை சகிதம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வந்து அவரது இடத்துக்கு நியமிக்கப் பட்டு பணியிலிருந்த வைத்தியர் ராஜீவுடன் முரண்பட்டு வெளியே றியமை, மாகாண, பிராந்திய பணிப்பா ளர்கள், வைத்தியர் ராஜீவ் உட்பட ஐந்து பேரின் முறைப்பாட்டுக்கமைய அடுத் தநாள் வைத்தியர் அர்ச்சுனா சாவகச்சேரி நீதிமன்றில் தோன்றி பிணையில் விடு விக்கப்பட்டமை, நீதிமன்ற உத்தர வுக்கமைய அதற்கடுத்தநாள் வைத்தியர் அரச்சனா சாவகச்சேரி காவல் நிலை யத்தில் தோன்றி விளக்கமளித்தமை, அன்று மாலையில் ஊடகங்களுக்கு விளக்கமளித்துவிட்டு இடமாற்றம் வழங் கப்பட்ட பேராதனை வைத்தியசாலை நோக்கிப் புறப்பட்டமை. இவையே சாவகச்சேரி வைத்தியசாலையை மையம் கொண்டு கடுங்காற்றுடன் பெய்த கன மழையாகும். கனமழை ஓய்ந்தாலும் அதன் தூவானம் இன்னும் ஓயாதது போன்று அவ்வைத்தியசாலையைச் சுற்றி நிகழ்வுகள் நடந்தவண்ணம் உள்ளன. 18ஆந்திகதி காலையில் இவ்வைத்திய சாலை தொடர்பாக முகநூல்பதிவு ஒன்று போடப்பட்டு பின்னர் அது அனைத்து ஊடகங்களிலும் வெளி யானது. விசத்தேள் கடித்ததன் காரண மாக தனது தந்தையை 17ஆந்திகதி இரவு 12.45 மணியளவில் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாகவும் அங்கு காவ லாளி, வைத்தியர், வைத்திய உதவியாளர் எவருமே இல்லை என்றும் அதனால் தந்தையை யாழ் போதனா வைத்திய சாலைக்குக் கொண்டுவந்து சேர்த்திருப்ப தாகவும் அந்த முகநூல் பதிவு காணப் பட்டது. வைத்தியசாலை தொடர்பாக ஓரளவு ஓய்ந்திருந்த முகநூல் விமர்ச னங்கள் மீண்டும் வீறுகொண்டெழுந் தன. இதனடிப்படையில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் பணிப்பாளர் தனக்களிக்கப்பட்டுள்ள சட்ட அதிகாரத்தின் கீழ் இது தொடர்பான விளக்கத்தை எதிர்வரும் 22ஆந்திகதிக்குள் தன்னிடம் கைய ளிக்குமாறு மாகாண, பிராந்திய சுகா தாரப் பணிப்பாளர்களிடமும் சாவகச் சேரி வைத்திய அத்தியட்கரிடமும் பணித்துள்ளதையும் காணமுடிகிறது.



பலர் கூறிக்கொள்வது போல வைத் தியர் அர்ச்சுனா முறைமையை (System) மாற்ற முயற்சித்தாரா? இங்கு நிலவுகின்ற வைத்திய முறைமை என்பது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மட்டுமான தன்று. அது இலங்கை முழுமைக்குமா னது. வளரும் நாடுகளிலிருப்பதைப் போல, குறிப்பாக ஏனைய தெற்காசிய நாடுகளைப் போன்று இலங்கையின் வைத்திய முறைமையும் பல்வேறு பல வீனங்களைக் கொண்ட ஒன்றுதான். அந்த முறைமையை தனியொரு அர்ச்சு னாவினாலோ அன்றி ஒருசில அர்ச்சு னாக்களாலோ இலகுவில் மாற்றிவிட முடியாது. இலங்கையின் ஒட்டுமொத்த முறைமையை மாற்றவேண்டுமென கோரிக்கையுடன் இலட்சக்கணக்கில் ஒன்றுதிரண்ட 'அரகலய' போராட் டத்தினால் கூட முறைமையின் தலை மையை மாற்ற முடிந்ததே அல்லாமல் முறைமையை மாற்ற முடியவில்லை. அது இன்னும் வலுவாகவாகச் செயற் பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அதேவேளை இலங்கையின் வைத்திய முறைமை வளரும் நாடுகளுடன் ஒப் பிடும்போது மேம்பட்டதாகவும் தர மான வைத்திய வசதிகளை மக்களுக்கு வழங்கக் கூடிய வகையிலும் கட்ட மைக்கப்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. முன்னேற்றமான சட்டங்கள், நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குப் பிரமா ணங்கள், உயர்மட்ட ஆளணிகளின் தர உறுதிப்பாடு போன்ற அடிப்படை விட யங்கள் நேர்த்தியாவே உள்ளன. மறுபுறத் தில் இறுக்கமான அந்த முறைமையின் பிரதான பங்காளராக அதைத் தொடர்ந்து பேணிக்கொண்டு அதனை மாற்ற முயல்வது என்பது ஒரு அக

> காவல் நிலையத்திற்கூட தான் கண்ட, கேட்ட, ஊகித்த விடயங்களைக் கூறினாரேயன்றி தான் முன்வைத்த எந்தவொரு குற்றச்சாட்டுத் தொடர்பாகவும் உறுதியான ஆதாரங்கள் எவற்றையும் அவர் முன்வைக்கவில்லை என அறியமுடிகிறது

முரண்பாடு. இந்தவகையில் அர்ச்சுனா வினால் முன்வைக்கப்பட்டு, மாற்றுவ தற்கு நடவடிக்கை எடுத்த குறைபாடுகள் அல்லது குற்றச்சாட்டுகள் என்பவை உண்மையில் அம்முறைமையினுள் காணப்பட்ட சில நடைமுறைப் பல வீனங்கள் அல்லது அம்முறைமையைப் பீடித்துள்ள நோய்கள் மட்டுமே. இத்தகைய பலவீனங்கள் இலங்கையில் வைத்தியத்துறையில் மட்டுமல்ல ஏனைய அரச துறைகளிலும் காணப் படுபவையே. இங்கு கடமை நேரத்தில் காணாமல் போவது வைத்தியர் என்றால் பிரதேச செயலகமொன்றில் அது கணக் காளராகவோ அல்லது நிர்வாக அதி காரியாகவோ இருக்கும். இங்கு மருந்தில் முறைகேடென்றால் கச்சேரியில் மானியத்தில் முறைகேடாக இருக்கும்.

முறைமையொன்றினுள்ளே காணப் படும் இத்தகைய குறைபாடுகள் அந்த முறைமையை இயக்குபவர்களால் உரு வாக்கப்படுவதைப் போலவே அவர் களாலே அவை தீர்க்கப்படவும் முடியும். நிறுவனங்களில் தலைவர்கள் மாறும் [illegible]நிறுவனங்களின் பணித் தரமும் மாறும் என்பது நாம் அன்றாடம் காணும் விடயம். நேர்மையும் ஆளு மையும் கொண்ட நிறுவனத் தலைவர் ஒருவர் விழுந்துவிட்ட நிறுவனத்தை தூக்கி நிறுத்தும்போது மக்கள் அவரைப் புகழ்வதும், அதேபோல அப்பண்புகள் இல்லாத தலைவரால் நிமிர்ந்து நின்ற அந்நிறுவனம் சரியும்போது மக்கள் அவரை இகழ்வதும் எமக்குத் தெரி யாததொன்றல்ல. இதன்மூலம் நிறுவ னத்தினுள்ளே காணப்படக்கூடிய பெரும்பாலான குறைபாடுகளை அதன் தலைவர்களால் களையமுடியும் என்ப துடன் அதற்கான எடுத்துக்காட்டுகளான வைத்தியசாலைகளும் நம்முன்னே உள்ளன. இந்த வகையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிலவிவந்த குறைபாடுகளை இனங்கண்டதுடன் அவற்றைக் களைவதற்கு வைத்தியர் அரச்சுனா முயன்றமை தவறானவை அல்ல என்பதற்கப்பால் அது அவரது கடமையும் பொறுப்புமாகும். அதனால் சாவகச்சேரி மக்களிடையே மட்டு மன்றிக் குடாநாட்டு மக்களிடையே பரவலாக அதற்கான வரவேற்புநிலை தொடக்கத்தில் காணப்பட்டது. ஆனால் அதற்காக அவர் கையாண்ட அணுகு முறைகள், வெளிப்படுத்தல்கள், அவற் றுக்கிடையேயான முன்பின் முரண்பாடு கள் போன்றன அவரது நோக்கம் தொடர்பாக பல ஐயங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியதுடன் அவருக்கு ஆதரவாக நின்ற மக்களில் பெரும்பாலா னவர்களை உறங்குநிலைக்கும் எதிர் நிலைக்கும் தள்ளிவிட்டது. தனது இருப் பைத் தக்கவைப்பதற்காக தனது நிற்கு மிடத்தை மறந்து, சாவகச்சேரி வைத்திய சாலையைக் கடந்து, வைத்தியத்துறை மீதும், தனிநபர்கள் மீதும் ஆதாரமற்ற பல குற்றச்சாட்டுகளை நாளாந்தம் அடுக்கியடுக்கி ஊடகங்களின் பசிக்குத் தீனிபோட முயன்றதால் இறுதியில் அவையே அவரைத் தனிமைப்படுத்திய துடன் நீதிமன்றத்திலும் கொண்டு சென்று நிறுத்தியது. நீதிமன்றில் நின்று தன்னிடம் பணமில்லை என்றும் இலவச சட்ட உதவி வேண்டுமென்றும் தனது வழமையான பாணியில் முகநூலூடாக மக்களிடம் அனுதாபத்தைப் பெற முயன்றாரே அன்றி அவற்றைப் பெறும் நோக்கம் அவருக்கு இருக்கவில்லை என்பது தெளிவானது. இருந்திருப்பின் மறுநாள் காவல்நிலையத்துக்குச் செல்லுமுன் தேவையான சட்ட ஆலோ சனைகளை இலவசமாக வழங்க சில சட்டவாளர்கள் பொதுவெளியில் விருப்பம் தெரிவித்திருந்த போதும் அதனை அவர் நாடியிருப்பார். காவல் நிலையத்திற்கூட தான் கண்ட, கேட்ட, ஊகித்த விடயங்களைக் கூறினாரேயன்றி தான் முன்வைத்த எந்தவொரு குற்றச் சாட்டுத் தொடர்பாகவும் உறுதியான ஆதாரங்கள் எவற்றையும் அவர் முன்வைக்கவில்லை என அறியமுடி கிறது. இறுதியில் வைத்தியர் அரச்சுனா எங்கிருந்து இங்கு கொண்டுவரப்பட் டாரோ அந்த இடத்துக்கே மீண்டும் திருப்பப்பட்டுள்ளார் என்றாலும் அவர் பல கேள்விகளை எம்முன்னே விட்டே சென்றுள்ளார்.

ஜூன் 14 ஆந் திகதி வைத்தியர் அர்ச்சுனா சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் நியமனம் பெற்று ஜூலை 18ஆந் திகதி அங்கிருந்து வெளியேறும் வரையிலான சுமார் ஒருமாதக் காலப் பகுதியில் அவரது செயற்பாடுகள், வெளிப்படுத்தல்கள் குறிப்பாக அவரது முகநூல் பதிவுகள், ஏனைய சமூக மற்றும்

(14ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நேட்டோ' சவால்!

பன்னாட்டு கூட்டமைப்புகளில் ஐக்கிய நாடுகள் சபைக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பாக 'நேட்டோ' கருதப்படுகிறது. 'நார்த் அட்லாண்டிக் ட்ரீட்டி ஆர்கனைசேஷன்' என்பதன் சுருக்கமான 'நேட்டோ' என்கிற அமைப்பு, மேற்கு வல்லரசு நாடுகளின் கூட்டமைப்பு என்கிற விமர்சனத்தைப் புறந்தள்ளிவிட முடியாது.

75 ஆண்டுகளுக்கு முன்பு அட்லாண்டிக் பெருங்கடலைச் சுற்றியுள்ள 12 மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் வாஷிங்டனில் கூடி உருவாக்கிய அமைப்புதான் 'நேட்டோ'. சோவியத் யூனியன் வலுப்பெற்ற நிலையில் கம்யூனிஸ சக்திகளுக்கு எதிராகத் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அமெரிக்காவின் தலைமையில் அந்த 12 நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட முடிவெடுத்தன.

இப்போது சோவியத் யூனியன் பழங்கதையாகிவிட்டது. வார்ஸா ஒப்பந்தமும் காலாவதியாகிவிட்டது. ஆனால், 'நேட்டோ' அமைப்பு புதிய உலக சூழலில் சவால்களை எதிர்கொள்ளும் வலுவான அமைப்பாகத் தொடர்கிறது.

கடந்த வாரம் 'நேட்டோ' அமைப்பில் இணைந்திருக்கும் 32 நாடுகளின் பிரதிநிதிகள் வாஷிங்டனில் சந்தித்தனர். உறுப்பு நாடுகளின் பாதுகாப்புக் குறித்த முக்கியமான முடிவுகள் மூன்று நாள்கள் நடந்த 'நேட்டோ' உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்டன.

75 ஆண்டுகளுக்கு முன்பு உருவான போது இருந்த அமைப்பாக இப்போதைய 'நேட்டோ' இல்லை. எந்த கம்யூனிஸ சக்திகளுக்கு எதிராக அந்த அமைப்பு தொடங்கப்பட்டதோ, அதே கம்யூனிஸ சக்திகளில் பெரும்பாலானவை, தங்களது கொள்கையைக் கைவிட்டு இப்போது நேட்டோவில் இணைந்திருக்கின்றன. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பல நேட்டோவில் இணைந்துவிட்டதும் உக்ரைன் இணைவதற்கு காத்திருப்பதும்தான் 'நேட்டோ' அமைப்புக்கு எதிராக ரஷ்யா விமர்சனம் உயர்த்துவதன் பின்னணி.

அமெரிக்கா தலைமையிலான 'நேட்டோ' அமைப்பை எதிர்த்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அதில் இணைந்திருப்பதும், இணைய விழைவதும் அமெரிக்காவின் பாதுகாப்பு வளையத்துக்குள் இடம்பெற விரும்புவதும் அந்த அமைப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. ஒருகாலத்தில் கம்யூனிஸ நாடுகளாக இருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சந்தைப் பொருளாதாரத்துக்கு மாறி ஜனநாயகப் பாதையில் திரும்பியது மட்டுமல்லாமல், நேட்டோவில் இணைந்தது ரஷ்யாவின் அச்சத்துக்கு காரணம். தனது அண்டை நாடான உக்ரைன் 'நேட்டோ'வில் இணைய விழைந்தபோது தனது எல்லையில் அமெரிக்க படைகள் நிறுத்தப்படும் என்கிற அச்சம் ரஷ்யாவுக்கு ஏற்பட்டிருப்பதில் வியப்பில்லை.

உக்ரைன் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து ஐரோப்பாவில் ரஷ்யாவின் சவாலும், இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் சீனாவும் தலைவலிகளாக மாறியிருக்கின்றன. ஒருபுறம் ரஷ்யாவும் சீனாவும் இணைகின்றன என்றால், இன்னொரு புறம் அந்த நாடுகளுக்கு ஆதரவாக ஈரானும், வடகொரியாவும் நேசக்கரம் நீட்டுகின்றன.

சமீபத்தில் வாஷிங்டனில் கூடிய 'நேட்டோ' உச்சி மாநாட்டில் சர்வதேச பாதுகாப்பு குறித்த விவாதம் முன்னிலை வகித்தது. உறுப்பு நாடுகள் அல்லாத ஜப்பான், தென் கொரியா, ஆஸ்திரே ஸ்ரீலியா, நியூஸிலாந்து உள்ளிட்ட அமெரிக்காவின் தோழமை நாடுகள் விவாதத்தில் பங்கெடுத்து பாதுகாப்பு குறித்த தங்களது கவலையையும், அதை வலுப்படுத்த முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் பகிர்ந்துகொண்டன. விவாதத்தில் சீனாவும் ரஷ்யாவும் புதிய சவால்களாகக் கருதப்பட்டன.




பிப்ரவரி, 2022-இல் தொடங்கிய உக்ரைன் போர் முடிவுக்கு வரவில்லை. ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்திருக்கிறார்கள். அதற்கு ரஷ்யா மட்டுமே காரணம் என்று சொல்லிவிட முடியாது. ரஷ்யாவை ஆத்திரப்படுத்தியதிலும், உக்ரைன் பிரச்னை முடிவுக்கு வராமல் இழுத்தடிக்கப்படுவதிலும் மேற்கத்திய நாடுகளின் பங்களிப்பு கணிசமானது.

'நேட்டோ' உறுப்பு நாடுகள் உக்ரைனுக்கு முழுமையான ஆதரவு அளிப்பதுடன், அடுத்த ஆண்டுக்குள் குறைந்தபட்சம் 4,000 கோடி யூரோ ராணுவ உதவி வழங்கவும் முடிவெடுத்திருப்பது உக்ரைன் பிரச்னைக்கு முற்றுப் புள்ளி விழாது என்பதை உறுதிப்படுத்தியது. ஐரோப்பாவுக்கு ரஷ்யாவால் ஏற்பட்டிருக்கும் அதிகரித்த ஆபத்தை எதிர்கொள்ள 2026-க்குள் ஜெர்மனியில் தொலைதூர ஏவுகணைகளை நிறுவ அமெரிக்கா முடிவெடுத்திருக்கிறது.

கடந்த மாதம் சுவிட்சர்லாந்தில் கூட்டப்பட்ட உக்ரைன் சமாதான மாநாட்டுக்கு ரஷ்யாவை அழைக்காததிலிருந்து எந்த அளவுக்கு 'நேட்டோ' உறுப்பு நாடுகள் அமைதியை ஏற்படுத்த முனைகின்றன என்பது வெளிப்படுகிறது.

உக்ரைன் மீதான ரஷ்ய போருக்கு சீனா ஆதரவு வழங்குகிறது என்கிற குற்றச்சாட்டை வாஷிங்டனில் கூடிய 'நேட்டோ' மாநாடு சுமத்தியிருக்கிறது. பதற்றத்தைத் தணிக்கவும், தொடரும் போரை நிறுத்தவும் அடிப்படை காரணத்துக்கு முடிவு காணவும் முன்வராமல் பழியைத் தங்கள் மீது சுமத்துவதாக சீனா விமர்சித்திருக்கிறது. அதில் நியாயம் இல்லாமல் இல்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை 'நேட்டோ' அமைப்பின் உறுப்பு நாடு அல்ல. 'நேட்டோ'வாக இருந்தாலும், காலாவாதியான வார்ஸா ஒப்பந்தமாக இருந்தாலும் அவற்றில் இணையாமல் தனக்கென்று அணிசாராக் கொள்கையை இந்தியா கடைப்பிடித்து வருகிறது. அதே நேரத்தில் சர்வதேச அரங்கில் முக்கியமான அமைப்பான 'நேட்டோ'வின் முடிவுகள் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் பல சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும்.

பாதுகாப்பு, ராணுவம் ஆகியவற்றில் 'நேட்டோ' உறுப்பு நாடுகளுடன் இந்தியா நெருக்கமான தொடர்பை அதிகரித்துவரும் நிலையில், முற்றிலுமாக நடுநிலை வகிப்பது சாத்தியமில்லை.

(தினமணி)

---

# வியுக்தியார் பதில்கள்



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

**எஸ், கிருஷாந்த்,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** எதிர்வரும் 25ஆம் திகதிக்கு பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது தலைமையிலான புதிய மெகா கூட்டணியை அறிவிப்பார் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளனவே கவனித்தீர்களா?.

**வியுக்தியார்:** மெகா கூட்டணி என்றதும் பல கட்சிகளை சேர்த்து கூட்டணி என்று நினைத்துவிடா தீர்கள். பல்வேறு கட்சிகளிலும் இருந்து பலரையும் பிரித்து எடுத்து அவர் அமைப்பதைத்தான் மெகா கூட்டணி என்கிறார்கள் போலும். பொதுஜனபெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி என்று மற்றய கட்சிகளிலுள்ள சிலரை வளைத்து எடுத்துவிட்டார். அவர்களில் பலருக்கு தனிப்பட்ட வாக்கு வங்கி இருக்கின்றதோ தெரியவில்லை. எல்லாம் தேர்தல் முடிவுகள் வரும்போதுதான் தெரியவரும்.

**த. பிரதீபன்,**
**சின்ன உப்போடை, மட்டக்களப்பு**

**கேள்வி:** கிடைக்கப்பெற்ற அதிகாரத்தை பயன்படுத்தி தேர்தல் ஆணைக்குழு ஜனாதிபதி தேர்தலை இழுத்தடிக்காமல் உடனடியாக நடத்தி மக்களின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** அவர் கேட்டிருப்பது நியாயமானதுதான், ஆனால் தேர்தல் அறிவிக்கப்பட்டு வேட்புமனு தாக்கல் செய்து, பிரச்சாரங்களை வேட்பாளர்கள் தொடக்கினாலும், அவர்களில் யாரை ஆதரிக்கவேண்டும் என்று தமிழ் அரசு கட்சி முடிவெடுக்குமா என்பதையுமல்லவா அவர் சொல்லவேண்டும். யாரை ஆதரிக்க வேண்டும் என்ற முடிவை இழுத்தடிக்காமல் சொல்வார்கள் என்றால் நல்லதுதான். எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போமே.

**கே. கோகுலன்,**
**கரவெட்டி கிழக்கு, கரவெட்டி**

**கேள்வி:** பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா மற்றும் ராஜித சேனாரத்ன, குமார வெல்கம ஆகியோரை சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் ஏனைய விடயங்களில் ஈடுபடுத்துவதில்லை என அக்கட்சி தீர்மானித்துள்ளதே எதற்காக?

**வியுக்தியார்:** ரணில் விக்கிரமசிங்கவுடன் அவர்கள் சேர்ந்து இயங்கத் தொடங்கிய பின்னரும் அவர்களை கட்சியிலிருந்து நீக்காமல் இப்படி தள்ளி வைத்திருப்பதை நினைத்து அவர்கள் சந்தோசப்பட அல்லவா வேண்டும். அவர்களை கட்சியிலிருந்து நீக்குவதற்கு ஏன் சஜித் இன்னமும் அச்சமடைகிறார் என்பதுதான் தெரியவில்லை. இந்த விடயத்தில் கூட முடிவெடுக்க முடியாத தலைவராக இருப்பதாக அல்லவா மக்கள் நினைக்கப் பாகிறார்கள்.

**வை. சிவலோகலிங்கம்**
**குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** எமது நிலப்பரப்பையோ அல்லது கடற்பரப்பையோ இந்தியாவின் நியாயபூர்வமான பாதுகாப்பு அக்கறைகளுக்கு எதிரான விதத்தில் மூன்றாம் தரப் பொன்று பயன்படுத்த நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** அப்ப நமது வான் பரப்பை மட்டும் [illegible] தெரியவில்லையே.

**க.சுகிர்தகுமார்,**
**பூவரசங்குளம், வவுனியா**

**கேள்வி:** துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களை கட்டுப்படுத்த முடியாமைக்கு புலிகளின் ஆயுதங்கள் புழக்கத்தில் இருக்கின்றமையே காரணம் என்று கூறியிருக்கிறார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ். அப்படியெனில் புலிகள் அழிக்கப்பட்டு இத்தனை ஆண்டுகளாகியும் அந்த ஆயுதங்களை இவர்களால் பிடிக்க முடியவில்லையா?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றும் இல்லை. விடுதலைப் புலிகளை மௌனிக்கச் செய்வதற்காக நடந்த யுத்தத்தின்போது புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை மட்டுமல்ல, நகைகள், மற்றும் பெறுமதிமிக்க பொருட்களை இப்போதுதான் வெளியே எடுக்கிறார்களோ தெரியவில்லையே. விடுதலைப் புலிகளின் ஒரு அங்கமாக இயங்கிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பல கோடி சொத்துக்களை மிக அண்மையில்தானே முடக்கியதுடன், அரசுடமையாக்கினார்கள். அதே போல புலிகளிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களையும் கைப்பற்றியவர்கள் இப்போதுதான் வெளியே எடுக்கிறார்களோ என்னவோ. அதைவிட இன்னுமொரு விடயமும் நமக்கு தெரிந்ததுதானே. எதை அவர்களால் செய்ய முடியாதோ அதனை புலிகள் மீது பழியைப் போட்டு விடுவது வழக்கமானதுதானே.

**ரி. பிறேம்தாஸ்,**
**சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** பொதுஜன பெரமுன கட்சி ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை எடுக்காவிட்டால் கட்சி இரண்டாக பிளவுபடும் என்று அக்கட்சி உறுப்பினரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றும் இல்லை, கட்சி இப்போதும் ஒற்றுமையாக- ஒன்றாக இருக்கிறது என்று மக்களுக்கு சொல்லிவைக்க முயற்சி செய்கிறார் என்று நினைக்கிறேன். ஏற்கனவே கட்சி பல்வேறு துண்டுகளாகத்தானே இருக்கிறது.

சிலவேளை ரணிலை ஆதரிக் காவிட்டால், ராஜபக்ச குடும்பத்திலும் பிளவு ஏற்பட்டு விடும் என்று எச்சரிக்கிறாரோ தெரியவில்லை. ரணிலை ஆதரிக்கவேண்டும் என்று மகிந்தரும் தனி வேட்பாளரை களம் இறக்க வேண்டும் என்று நாமலும் அடம்பிடிப்ப தாக கூறுகிறார்களே, அதைத்தான் அவர் சொல்கிறார் என்று நினைக்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க துப்பாக்கி கலாசார விளைவா? ட்ரம்ப் மீதான சூடு உளவுத்துறை கவலையீனமா?


ஐங்கரன் விக்கினேஸ்வரா

உலகிற்கு நீதியை போதிக்கும் அமெரிக்காவில் அரசியல் படுகொலைகளும், கொலை முயற்சிகளும் இது முதற் தடவையல்ல. ஆபிரகாம் லிங்கன், ஜெஎப் கென்னடி, மார்டின் லூதர் கிங் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டு உள்ளனர். 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து டொனால்ட் ட்ரம்ப் வரை, அமெரிக்க ஜனாதிபதிகளின் மீதான படுகொலை முயற்சிகள் மற்றும் சதிகள் ஏராளமாக நடந்துள்ளன.

அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மீது கடந்த வாரம் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் பென்சில்வேனியாவில் பட்லர் நகரில் குடியரசு கட்சியின் அதிபர் வேட்பாளராக உரையாற்றிக் கொண்டிருந்த போது அவர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.




துப்பாக்கிச் சூட்டில் டொனால்ட்



ட்ரம்பின் காதுப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது. திறந்த மேடையில் உரையாற்றிக் கொண்டிருந்த போது அவர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்ட போது இலக்கு தவறி அவரது காது பகுதியில் தாக்கியுள்ளது. துப்பாக்கிச் சூடு நடத்தியவர் மீது போலீஸார் நடத்திய பதில் தாக்குதலில் அவர் உயிரிழந்தார்.

உடனடியாக சுதாரித்துக் கொண்ட ட்ரம்ப் கீழே குனிந்து தன்னை பாதுகாத்து கொண்டார். உடனடியாக விரைந்த பாதுகாப்பு தரப்பினர் மேலும் அசம்பாவிதம் ஏற்படாத வகையில் நிலமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருந்தனர்.

**அடுத்த ஜனாதிபதி ட்ரம்ப்?**

துப்பாக்கிச் சூட்டில் மயிரிழையில் தப்பினார் ட்ரம்ப் என்றும், அடுத்த ஜனாதிபதி ட்ரம்ப் உறுதியாகிவிட்டது எனவும் சில ஊடகங்கள் சிலாகித்து எழுதத் தொடங்கிவிட்டன.

அமெரிக்க அரச கட்டமைப்புக்கு புறம்பாக செயற்படுவார் என நம்பபப் பட்ட ட்ரம்ப் நேட்டோவை பலவீனப் படுத்துவார் என்றும் ஊகிக்கப்பட்டது. டொனால்ட் ட்ரம்ப் படுகொலை செய்யப்படலாம் என்ற அச்சம் ஏற்கனவே இருந்து வந்தது.

அத்துடன் ரஷ்யாவுக்கு ஆதரவாகச் செயற்படுவார் என்றும், உக்ரைன் யுத் தத்தை ரஷ்யாவுக்கு ஆதரவாக முடிவுக்கு கொண்டுவருவார் போன்ற காரணங்களால் இவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தப்படலாம் என்ற அச்சமும் நீண்ட காலமாக இருந்தது.

இத்தகைய நிலையில் அனுதாப வாக்குகளிலாயே டொனால்ட் டிரம்ப் வெல்லக்கூடிய சாத்தியங்கள் தற்போது எழுந்துள்ளது என அமெரிக்க ஊடகங்களே தெரிவிக்கின்றன.

> டொனால்ட் டிரம்ப் மீதான தாக்குதல் மிகப்பெரும் வல்லரசு நாட்டின் உளவுத்துறையின் பலவீனத்தை காட்டியுள்ளது. தற்போது அனுதாப வாக்குகளிலாயே டொனால்ட் டிரம்ப் வெல்லக்கூடிய சாத்தியங்கள் தற்போது எழுந்துள்ளது என அமெரிக்க ஊடகங்களே தெரிவிக்கின்றன

**அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரம்**

அமெரிக்காவில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு துப்பாக்கி கலாசாரம் தற்போது அதிகரித்துக் காணப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 600-க்கும் மேற்பட்ட பொது இடங்களில் துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

"வெகுஜன துப்பாக்கிச்சூடு" (Mass Sooting) என்பதற்கு அமெரிக்கா ஒரு வரையறையைக் கொண்டிருக்கவில்லை என்றாலும், துப்பாக்கி வன்முறைக் காப்பகம் ஒரு வெகுஜன துப்பாக்கிச்சூட்டை நான்கு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்த - கொல்லப்பட்ட சம்பவமாக வரையறுக்கிறது.





அமெரிக்காவில் நூறு குடியிருப்பாளர்களுக்கு 120.5 துப்பாக்கிகள் உள்ளன. துப்பாக்கி வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை வீடுகளிலும், பொது இடங்களிலும் நடக்கும் துப்பாக்கிச்சூடுகளை உள்ளடக்கியிருக்கிறது. இது கனடா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து உள்ளிட்ட பல நாடுகளில் நடக்கும் கொலைகளை விட கணிசமாக பெரிய விகிதமாகும்.

ஸ்விட்சர்லாந்தைத் தளமாகக் கொண்ட முன்னணி தனியார் ஆராய்ச்சி நிறுவனம், உலகெங்கிலுமுள்ள தனியார் கைகளில் துப்பாக்கிகளின் எண்ணிக்கை குறித்து ஆய்வு செய்ததில், 390 மில்லியன் துப்பாக்கிகள் புழக்கத்தில் இருந்ததாக மதிப்பிடுகிறது. அத்துடன் கடந்த பல வருடங்களாகத் துப்பாக்கி வைத்திருப்பது குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருப்பதாக அமெரிக்காவின் சமீபத்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

**அமெரிக்க வரலாற்றில் படுகொலை**

ஜனவரி 30, 1835 இல், ஆண்ட்ரூ ஜாக்சன் ஒரு படுகொலை முயற்சியை அனுபவித்த முதல் ஜனாதிபதி ஆவார். அப்போது ரிச்சர்ட் லாரன்ஸ் இரண்டு முறை அவரை சுட முயன்றார். லாரன்ஸால் குறி தவறாக சுடப்பட்டதால் அந்த முயற்சி தோல்வியடைந்தது.

வரலாற்றில் அமெரிக்காவின் நான்கு பதவியில் இருந்த ஜனாதிபதிகள் கொல்லப்பட்டுள்ளனர். 1865 இல் ஆபிரகாம் லிங்கனை ஜான் வில்க்ஸ் பூத் என்பவர் சுட்டுக் கொன்றார். அதன் பின் இன்னோர் அதிபர் ஜேம்ஸ் ஏ. கார்ஃபீல்ட் 1881இல் சார்லஸ் ஜே. கிடோவால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1901இல் வில்லியம் மெக்கின்லி எனும் ஜனாதிபதியை லியோன் சோல் கோஸ்ஸால் என்பவர் சுட்டுக் கொன்றார். பலத்த சர்ச்சை உருவாக்கிய ஜான் எஃப். கென்னடி கொலை 1963இல் லீ ஹார்வி ஒஸ்வால்ட் என்பவரால் நடாத்தப்பட்டது.

இற்றைவரை மூன்று ஜனாதிபதிகள் படுகொலை முயற்சியில் காயமடைந்துள்ளனர். முன்னாள் ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் 1912, ஜான் ஷ்ராங்க் என்பவரால் காயமடைந்தார். பனிப்போர் காலத்தில் பிரபல்யமான ரொனால்ட் ரீகன் 1981, ஜான் ஹிங்க்லி ஜூனியர் என்பவரால் சுடப்பட்டு காயமடைந்தார்.

**உளவுத்துறை கவலையீனம்**

தேர்தல் பிரச்சாரத்தில் டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து அவர் மேடையில் இருந்து பாதுகாவலர்கள் புடை சூழ வெளியேறினார். இந்த தாக்குதலை அமெரிக்க நாட்டின் உளவுத்துறை உறுதி செய்து இருந்தாலும் மிகப்பெரும் வல்லரசு நாட்டின் உளவுத்துறையின் பலவீனத்தை காட்டியுள்ளது.

குடியரசு கட்சியின் அதிபர் வேட்பாளரான முன்னாள் அதிபர் ட்ரம்ப், தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய போது இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட வேளையில் உளவு அமைப்புகளின் பங்களிப்பை பலரும் விமர்சித்துள்ளனர்.

எனினும் ட்ரம்பின் வலது காது பகுதியில் காயம் ஏற்பட்டது. காதில் இருந்து ரத்தம் சொட்டிய நிலையில் தனது கையை உயர்த்தி காட்டினார். தொடர்ந்து பாதுகாவலர்கள் அவரை மேடையில் இருந்து பத்திரமாக அழைத்து சென்றனர். இந்தக் காட்சி ஊடகங்களில் அவருக்குரிய அனுதாப அலையை பாரியளவில் உருவாக்கியுள்ளது என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டக்காரர்கள் 105 பேர் உயிரிழப்பு!

## பங்களாதேஷில் இலங்கை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 21

பங்களாதேஷில் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இதுவரை 105 பேர் உயிரிழந்ததாகவும், நேற்று முன்தினம் மாத்திரம் 52 ஆர்ப்பாட்டக்காரர்கள் உயிரிழந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, பங்களாதேஷில் நிலவும் அமைதியின்மை காரணமாக அந்த நாட்டில் தங்கியுள்ள இலங்கை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த நாட்டிலுள்ள 03 பல்கலைக்கழகங்களில் சுமார் 50 இலங்கை மாணவர்கள் கல்வி கற்று வருவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.


பங்களாதேஷில் இடம்பெற்று வரும் போராட்டங்கள் காரணமாக பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளதாலும் வெளிநாட்டு மாணவர்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு அறிவிக்கப்படாததாலும் இலங்கை மாணவர்கள் பாதுகாப்பாக விடுதிகளில் தங்கியிருப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பங்களாதேஷில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர், மாணவர்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டறிந்துள்ளதுடன் மாணவர்களின் பாதுகாப்பு குறித்து பல்கலைக்கழக நிர்வாகத்துடன் கலந்துரையாடினார்.

அரசாங்கத்தின் வேலை ஒதுக்கீட்டு முறையை மாற்றக் கோரி மாணவர்கள் நடத்தும் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளதால் பங்களாதேஷ் முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டுள்ள போதிலும், மாணவர் சங்கப் பிரதிநிதிகள் தமது போராட்டங்களைத் தொடரவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

மாணவர்களின் உயிரிழப்புக்கு பொறுப்பேற்று பிரதமர் ஷேக் ஹசீனா உடனடியாக பதவி விலக வேண்டும் என்று போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர். (எ)



# ஓட்டோ சாரதி தொழில் நடத்த தொழில்சார் விதிகள் அவசியம்

## ஜனாதிபதி ரணில் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 21

ஓட்டோ பயணிகள் போக்குவரத்து தொழிலை நடத்துவதற்கு தொழில்சார் விதிகள் அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தொழில்முறை ஓட்டோ சாரதிகள் மற்றும் போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொழில்முறை ஓட்டோ சாரதிகளின் தொழில் முன்னேற்றம் தொடர்பான யோசனை ஒன்றும் ஜனாதிபதியிடம் இதன்போது கையளிக்கப்பட்டது. (எ)

# ஜப்பான் சென்ற அநுரவுக்கு இலங்கையர்கள் வரவேற்பு



டோக்கியோ, ஜூலை 21

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க இலங்கையர்களை சந்திக்கும் பொதுக்கூட்டம் மற்றும் வர்த்தக கூட்டமொன்றில் பங்கேற்பதற்காக ஜப்பான் சென்றுள்ளார்.

நரிட்டா சர்வதேச விமான நிலையத்தில் அநுரகுமார திஸநாயக்கவை ஜப்பானில் வசிக்கும் இலங்கையர்கள் உற்சாகமாக வரவேற்றனர். (எ)

# ஜனாதிபதி தேர்தலும்....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் இருக்கிறது.

இத்தகைய பின்புலத்தில் சில தினங்களுக்கு முன்னர் இலங்கையின் முன்னணி அரசியல் ஆய்வாளர்களில் ஒருவரான பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட "ஜனாதிபதி தேர்தலுக்கு முந்திய இலங்கை அரசியல் நிச்சயமற்ற நிலை அல்லது குழப்பநிலை" என்ற தலைப்பில் நீண்டதொரு கட்டுரையில் கூறியிருக்கும் முக்கியமான ஒரு கருத்தை இங்கு நினைவுபடுத்துவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

"அக்டோபருக்கு பிறகு இலங்கையை ஆட்சி செய்யப்போவது யார்?" என்ற கேள்வி மூன்று காரணங்களுக்காக மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

"முதலாவதாக, பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்தின் ஆட்சிக்கு பதிலாக கூடுதலான அளவுக்கு ஜனநாயக ரீதியானதும் பொறுப்புக்கூறக்கூடியதுமான அரசாங்கம் ஒன்றை வேண்டிநின்ற 2022 அறகலய மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு இடம்பெறப்போகும் முதல் தேர்தல் இதுவாகும்.

"இரண்டாவதாக, அதிகப்பெரும்பான்மையான மக்கள் மீது சுமத்தப்படுகின்ற முன்னென்றுமில்லாத வகையிலான துன்பங்களைப் பற்றிய பிரக்ஞை எதுவுமின்றி , சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடனான பொருளாதார மறுசீரமைப்புச் செயற்திட்டத்தை கடந்த வருடம் தொடக்கம் நடைமுறைப்படுத்திவரும் தற்போதைய அரசாங்கம் தொடர்பில் தங்கள் தீர்ப்பை இலங்கை வாக்காளர்கள் கூறுவதற்கு தேர்தல் வாய்ப்பளிக்கிறது.

மூன்றாவதாக, நாட்டின் புதிய ஆட்சியாளர்களாக மாற்று அரசியல் தலைமைத்துவம் ஒன்று மேலெழுவதற்கு வழிவகுக்கக்கூடிய ஒரு புதிய கட்டத்தை இலங்கை அரசியல் எட்டியிருக்கிறதா என்பதை இந்த தேர்தலின் முடிவுகள் வெளிக்காட்டும்."

# நல்லதோர் வீணை செய்து...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொலைக்காட்சி ஊடகங்களினூடான அவரது கருத்துக்களை அவதானிக்கும் ஒருவர் அவரது கருத்துக்களில் முன்பின் முரண்பாடுகள் இருந்தபோதும் பின்வரும் முடிவுக்கு வரக்கூடும். இங்குள்ள வைத்தியத்துறையும் வைத்தியர்கள் எல்லோரும் மிக மோசமானவர்கள் என்றும் தான் ஒரு நேர்மையான புரட்சியாளனாகவும், இந்த மோசமானவர்களுக்கு எதிராகப் போராடும் சினிமாப் பாணியிலான ஒரு கதாநாயகனாகவும் தன்னைச் சித்தரிப்பதன் மூலம் மக்களிடையே தனக்கான ஆதரவுத்தளம் ஒன்றை உருவாக்குவதே அந்த முடிவு. இறுதியில் டக்ளஸைத் தவிர இங்குள்ள அரசியல் தலைவர்கள் தகுதியற்றவர்கள் அவர்களுக்குப் பதிலாக தன்னைப் போன்றவர்கள் வரவேண்டும் என்று தனது அரசியல் அவாவை வெளிப்படுத்தியதுடன் அர்ச்சுனாவின் ஆட்டம் தற்காலிகமாக நிறைவு பெற்றுள்ளது. சாவகச்சேரி வைத்தியசாலைக் குறைபாடுகளைக் களையப் புறப்பட்ட வைத்தியர் அர்ச்சுனா இறுதியில் யாழ்ப்பாண வைத்தியத்துறையினைத் திருத்துவதற்குத் தனக்கு அரசியல் அதிகாரம் வேண்டும் என்ற முடிவுக்குத் தள்ளப்பட்டுள்ளார். இந்த முடிவு தொடக்கத்திலிருந்ததா அல்லது அதன்பின்னரான கள நிலைமையைக் கொண்டு அவரால் எடுக்கப்பட்டதா என்பது ஆய்வுக்குரியது. ஆனாலும் அவர் அந்த முடிவுக்கு வரவேண்டும் என அழைக்கும் உள்நாட்டு, வெளிநாட்டுத் தமிழர்கள் பலர் உள்ளனர் என்பதை சமூக ஊடகங்களில் காணலாம்.

எது எவ்வாறிருப்பினும் வைத்தியத்துறைமீது அரச்சுனா மூட்டிய தீ இன்னும் அணைந்து விடவில்லை. அது நீறு பூத்த நெருப்பாக இன்னும் கனன்று கொண்டுதான் இருக்கிறது. அரச்சுனா கூறியவற்றில் சில பொய்களும் சில மிகைப்படுதல்களும் காணப்பபட்டாலும் நிறைய உண்மைகள் உண்டு என்பதை அர்ப்பணிப்புடன் நேர்மையாகப் பணிபுரியும் பெரும்பாலான வைத்தியர்கள் ஏற்றுக்கொள்வர். முகநூல் பதிவுகளூடாகவே தென்மராட்சியில் இருந்து மட்டுமன்றி குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்களை இரவு பகல் பாராது அணிசேர்க்க முடிந்தது என்றால் அது வெறும் உணர்ச்சியூட்டல்களால் மட்டும் ஏற்பட்டது என்று தவறாக எடைபோடக்கூடாது. இந்த வைத்தியத்துறைமீது மக்கள் கொண்டிருக்கும் அதிருப்தி, கோபம், வெறுப்பு என்பற்றின் கூட்டுப் பிரதிபலிப்பு என்பதைத் தொடர்புபட்டோர் உணரவேண்டும். வைத்தியத்துறைமீதான அதிருப்திக்கு அங்குள்ள சிறுபிரிவினர் காரணமாக இருக்கலாம். அதைக் கண்டிக்காது அனுசரித்துப் போன பெரும்பாலான வைத்தியர்களும் மக்களின் கோபத்துக்கு ஆளானதையும் சகலவைத்தியர்களும் மோசமானவர்கள் என்ற பழிச்சொல்லை அவர்களும் சுமக்க வேண்டிவரும் என்பதையும் அவர்கள் நிதர்சனமாகக் கண்டிருப்பார்கள். மறுபுறத்தில் பொறுப்பான அதிகாரிகள், வைத்தியர் அரச்சுனா மனநிலை சரியில்லை என்று கூறுவதன் மூலமோ அல்லது அர்ச்சுனா-ராஜீவ் என்ற இருவருக்கிடையிலான ஒரு பிரச்சினை இது என்று காட்டுவதன் மூலமோ அல்லது அர்ச்சுனாமீது சட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலமோ அல்லது அர்ச்சுனாவுக்கு இடமாற்றம் வழங்கி அனுப்பியதன் மூலமோ அல்லது இதைச்செய்ய எங்களுக்கு அதிகாரம் இல்லையெனக் கைவிரிப்பதன் மூலமோ வைத்தியத்துறையில் நிலவும் ஊழல், முறைகேடுகள், வைத்தியத் தவறுகள், பணி உதாசீனங்கள் போன்ற பல்வேறு காரணங்களால் ஏற்பட்ட மக்களின் வெறுப்பை தணித்துவிடலாம் எனக் கனவு கண்டால் அதைவிட முட்டாள்தனம் வேறொன்றும் இருக்க முடியாது. கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்கள் தங்கள் தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பலர் காத்திருக்கிறார்கள் என்பதையும் கண்டுள்ளோம். ஆகவே இது வைத்தியத்துறையில் சீர்கேடுகளைக் களைந்து ஒட்டுமொத்த மாற்றத்துக்குக் கிடைத்த ஒரு அரிய சந்தர்ப்பம். இச்சந்தர்ப்பத்தை உதாசீனம் செய்து பழைய பல்லவியே பாடப்படுமானால் நீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கும் தீ மூண்டெழுவதற்கு அதிநேரம் தேவைப்படாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய...

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு சிங்கள வேட்பாளருக்கும் ஆதரவை வழங்காது தமிழர் தரப்பில் இருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் அண்மைக்காலமாக சிவில் சமூகத்தின ராலும் அரசியல் கட்சிகளாலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் இதற்குப் பல்வேறு அமைப்புகளும் பல்வேறு கட்சிகளும் ஆதரவு வழங்கியுள்ள நிலையில் இதன் அடுத்த கட்டமாக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும், சிவில் சமூகத் தினருக்கும் இடையில் முதலாவதாக ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இவ்வாறு இரு தரப்பினர்களுக்கும் இடையிலும் பல்வேறு விடயங்களை உள்ளடக்கி ஒப்பந்தம் கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவு உள்ளிட்ட ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## மாத்தறை...

மாலை இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த கைதி உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## 22ஆவது...

அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த சட்டமூலத்தை தற்போது கொண்டு வருவதற்கான அவசியம் என்ன? எனது பார்வையில் இது ,வாக்காளர்ளுக்கு குழப்பத்தை ஏற்படுத்துகின்றது.

அரசமைப்பில் ஆணை வழங்கப்பட்டுள்ளபடி ஐந்தாண்டு முடிவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதை இது சிக்கலுக்குட்படுத்தும்.

22ஆவது திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட் டால் அது குறித்து சர்வஜன வாக் கெடுப்பை நடத்துவதற்கான அதிகா ரத்தை அரசமைப்பு ஜனாதிபதிக்கு வழங்குகின்றது. தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இது அதனை மேலும் குழப்பத்திற்குள்ளாக்கும்.

தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலத்தில் இது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாத நிலையில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது அவசிய மற்ற விடயம் - என்றார். (அ)

## தம்பாப்பிள்ளை...

இங்கிலாந்தில் பொறியியல் உயர்கல்வியை கற்றுக் கொண்டிருந்தவர், கல்வியை இடைநிறுத்திவிட்டு இலங்கை திரும்பி, இன விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்தினார்.

இவர் இராணுவத்திணரால் கைதாகி பனாகொட இராணுவ தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்தார். அங்கிருந்த தடுப்புக் கம்பிகளை வாளால் அரிந்து சுவிங்கம் மூலம் ஒட்டி வைத்து சந்தர்ப்பம் பார்த்து கம்பிகளை அகற்றி தப்பிய போதிலும், மறுநாளே மாறு வேடத்தில் நடமாடியவேளை கொழும்பில் மீண்டும் கைதானார்.

1983 வெலிக்கடை சிறைக் கைதிகள் படுகொலைச் சம்பவத்தில் இவர் உட்பட கைதிகள் தங்கியிருந்த கூண்டுக்குள் காடையர்கள் புக முற்பட்டவேளை நுழைய விடாமல் போராடி தடுத்தார். பின்னர், வெலிக்கடை தமிழ் கைதிகள் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர். பின்னர், மட்டக்களப்பு சிறை உடைத்து தப்பியவர்களில் மகேஸ்வரனும் ஒருவர்.

சிறிது காலம் இந்தியாவில் கழித்தவர், 2009 யுத்தம் நிறைவடைந்த பின்னர், இலங்கை திரும்பினார். நாடு திரும்பிய பின் கொழும்பில் சில காலம் தங்கியிருந்த பின், யாழ்ப்பாணம் வந்து நாயன்மார்கட்டில் தங்கியிருந்த நிலையில் நேற்று உயிரிழந்தார். தான் தங்கியிருந்த வீட்டின் பின்பகு தியில் அவர் நேற்று முன் தினம் சடல மாக மீட்கப்பட்டார்.

அவரது உடல் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உடற்கூறாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்தமை தெரியவந்தது. (அ)

## தேர்தலை...

ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. ஜனாதிபதி தலைமையிலான அரசும் அதே நிலைப்பாட்டில்தான் உள்ளது. தற்போது தேர்தலுக்கு சாதகமான சூழல் நிலவுகின்றது. அநுராதபுரம் மாவட்டத்தில் எமது வெற்றி உறுதியாகியுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பொதுஜன பெரமுன கட்சி இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை என்பதை பொறுப்புடன் கூறுகின்றேன். நானும் அரசியல் குழுவில் இருக்கின்றேன். மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அந்த குழுகூடியே முடிவெடுக்கும். வெகு விரைவில் அந்த முடிவு எடுக்கப்படும். - என்றார். (அ)

## ஜனாதிபதி தேர்தலில்...

தினம் நாட்டில் உள்ள பெருந்தொகையான மக்கள், தமது வாக்குகளை மக்கள் விடுதலை முன்னணிக்கு வழங்குவதாக அறிவித்தனர்.

ஆனால் இன்று அந்த நிலை மாறிவிட்டது. அவர்களை இன்று காணவில்லை. மற்றொரு பகுதியினர் சஜித் பிரேம தாசவுக்கு வாக்களிக்கப் போவதாக அறிவித்தனர். இன்று அவர்களும் அமைதியாக இருக்கிறார்கள்.

நாம் முன்னெடுத்த வலுவான வேலைத் திட்டங்களினால், அவர்களால் மக்கள் மத்தியில் செல்ல முடியவில்லை. நாம் உருவாக்கிய சக்தியை அவர்களால் எதிர்கொள்ள முடியவில்லை.

அதற்கு அவர்களிடம் பதில் இல்லை.

ஆனால் எமது செயற்பாட்டை நாம் இப்போதுதான் ஆரம்பித்துள்ளோம்.

மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட குழுக்கள், நாட்டின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கும், தொலை நோக்குடைய, தெளிவான திட்டத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது தெரிகிறது.

இவர்கள் போலிப் பிரசாரம் செய்வதையும் மக்கள் அறிந்து கொண் டுள்ளனர். பொய் சொல்வதால் நாட்டை முன்னேற்ற முடியாது.

சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளை போல இலங்கையை முன்னேற்றுவதற்கான முயற்சிகள் குறித்து, நாம் சிந்திக்க வேண்டும். நாட்டுக்கு பொருத்தமான அரசிய லமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

பல கட்சிகள் இருக்கலாம். ஆனால் இலக்கு ஒன்றாக இருக்க வேண்டும். அரசியல் கட்சிகள் தனித்தனியாகச் செயற்படும் நேரங்கள் இருக்கலாம். ஆனால் ஒரு கட்டமைப்பில் ஒன்றாக வேலை செய்வதற்கான இயலுமையையும் கொண்டிருக்க வேண்டும்.

வேலையின்மையினால் பாதிக்கப்பட்டுள்ள இளையோருக்கு, வேலை வாய்ப்புக்களை உருவாக்க வேண்டிய கட்டாயம் தற்போது உருவாகியுள்ளது.

நாட்டில் 25 வீத வறிய மக்கள் உள்ளனர் என்பதையும் மறந்துவிட முடியாது. அவர்களையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான பல்வேறு பொருளாதார திட்டங்கள் உள்ளன.

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் உள்ளிட்ட கட்சிகள், கடந்த ஆறு மாதங்களாக, ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்களை செய்து வருகின்றன. அந்த கட்சிகள் ஒரு வருடமாக அதற்காக பாடுபடுகின்றனர்.

நாம் உரிய நேரத்தில் பணிகளை ஆரம்பிப்போம். நாங்கள் வெற்றி பெறுவோம் என்ப தில், எனக்கு எந்த சந்தேகமும் இல்லை - என்றார். (அ)

## ஜனாதிபதித் தேர்தலை பின்தள்ள...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இன்னும் காணப்படுகின்றன. அரசியலமைப்பின் ரீதியாக, சட்ட ரீதியாக அதற்கான வாய்ப்புகள் உண்டு.

ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 அல்லது 6 வருடங்களா என்பது தொடர்பிலான சிக்கலுக்கு தற்போது 22 ஆவது திருத்த சட்டமூலத்திற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அது எதிர்வரும் வாரத்தில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து 2/3 பெரும்பான்மை அல்லது சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அதனை அமுல்படுத்துமாறு உத்தரவிடப்படும்.

நீதிமன்ற உத்தரவுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு நிச்சயமாக இணங்க வேண்டும். அதன் காரணமாகவே வாய்ப்புகள் இருப்பதாக கூறினேன்.

அவ்வாறு 2/3 பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்ற முடியாமல் போனால் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்கவும் வாய்ப்புகள் உள்ளன. அதற்கான வாய்ப்பும் , அதிகாரமும் ஜனாதிபதியிடம் உண்டு. சட்டங்கள் அமுல்படுத்துவதற்கா கவே உள்ளன.

ஜனாதிபதி தேர்தலை ஒத்தி வைப்பதற்கான வாய்ப்புகள் நூற்றுக்கு 50 வீதம் உள்ளது.

சர்வஜன வாக்கெடுப்பில் எந்த தீர்மானம் எடுக்கப்பட்டாலும் தேர்தல் ஒத்தி வைக்கப்படுவது உறுதி-என்றார். (அ)

## ரணிலின்...

பெரும்பாலானவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதனால் பொதுச் சின்னமாக குதிரைச் சின்னத்தை தேர்ந்தெடுப்பது பற்றி ஜனாதிபதி ஆராய்ந்து வருகின்றார். கப்பல் சின்னத்தை ஏற்குமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், பொருளாதாரப் போரில் வெல்வதற்கு குதிரைபோல் வேகமாக பயணிக்கக்கூடிய ஒருவரே தேவை என்ற பிரசாரம் இதன்மூலம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)

## ரணில்...

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சிகள் இடம்பெறுவதாக மக்கள் மத்தியில் நிச்சயமற்ற கருத்துக்கள் உருவாகுவதை தடுக்கவே உரிய வர்த்த மானி அறிவித்தலை வெளியிடாமல் இடைநிறுத்தி வைத்தாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

ஆனால், இந்த விடயம் தொடர்பாக எவராது மாறுபட்ட கண்ணோட்டத்தில் செயல்பட்டால், அதன் முடிவுகளை அவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

மக்கள் மீது நல்லெண்ணம் கொண்டே ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை அதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடவேண்டாம் என அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோரினால் அமைச்சரவை அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த விவகாரத்தால் ரணில் விக்ரமசிங்கவுக்கும் விஜயதாச ராஜபக்ஷவுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் முற்றியுள்ளதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விஜயதாச ராஜபக்ஷவின் அமைச்சுப் பதவியை உடனடியாக பறிக்க வேண்டுமென அமைச்சரவை அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்துள்ளதாகவும் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

என்றாலும், இத்தருணத்தில் விஜயதாச ராஜபக்ஷவை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கினால் அது அரசாங்கத்துக்கு பாதாகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தும் என்பதால் விஜயதாச ராஜபக்ஷவுக்கு அழுத்தம் கொடுத்து அவராகவே அமைச்சுப் பதவியை துறக்கும் சூழ்நிலையை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க உள்ளதாகவும் தெரியவருகிறது. (அ)

## மூளாய்...

நகைகளைப் பெட்டகத்தினுள் வைத்து பூட்டிவிட்டு கடமைகளுக்கு சென்றிருந்தனர்.

பணியாளர்கள் கடமை முடிந்து வந்து பார்த்தபோது, பெட்டகங்கள் உடைக்கப்பட்டு, பணியாளர்களின் நகைகள் மற்றும் பணம் திருடப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பணியாளர்களால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## ஜனாதிபதி...

தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவது முழு நாட்டுக்கும் நன்மை பயக்கும். அதிலும் குறிப்பாக தமிழர்களுக்கு நன்மையே.

இந்த ஜனாதிபதித் தேர்தலை பொறுத்த வரைக்கும் வேட்பாளர் எவரும் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற முடியாத நிலைமை காணப்படுகிறது. அதனால், அவர்கள் சிறுபான்மையின மக்களின் வாக்குகளைப் பெற முனைப்பு காட்டுவார்கள்.

அதேநேரம், ஜனாதிபதித் தேர்தலில் எவரும் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறாத நிலைமை ஏற்படும் போது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமல் போகும்.

எனவே, அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து ஒரு வருட காலத்துக்கு ஜனாதிபதித் தேர்தலை பிற்போட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டும் - என்றார். (எ)

## பல்கலை...

சுட்டிக்காட்டினார்.

மட்டக்களப்பு பூனானையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை நேற்று மாணவர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளித்த பின்னர் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க-

பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களை பட்டங்களை விற்கும் கடைகள் என்ற கேவலமான பேச்சுக்கு நாம் செவிசாய்க்கக் கூடாது. பிள்ளைகள் சுதந்திரமாக கல்வி கற்கும் வகையில் இந்நாட்டில் உள்ள பல்கலைக்கழக முறைமை மறுசீரமைக்கப்படவேண்டும். நாளை முதல் சமூக வலைத்தளங்களில் இதனைச் சொல்லி என்னைக் குறை கூறலாம். பல்கலைக்கழகத்தில் அரசியல் செய்யவேண்டிய அவசியம் இல்லை.

பல்கலைக்கழகக் கட்டமைப்பில் இருந்து அச்சுறுத்தும் அரசியலை அகற்ற வேண்டும். பல்கலைக்கழகத்துக் குள் தங்களுக்கு விருப்பமான கற்கை யைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். நமது பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் சீர்குலையாமல் முறையான கல்வி நிறுவனங்களாக மாற வேண்டும்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மாற்றுவலுவுள்ளோர் தேர்தலில் வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பம்!

## தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 21

**ஜனாதிபதித் தேர்தலில் முதன்முறையாக விழிப்புலனற்றோர் மற்றும் செவிப்புலன் குறைபாடுடையவர்கள் வாக்களிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.**

பார்வையற்றோர் பிரெய்ல் முறையில் வாக்குச் சீட்டின் அடையாளங்களை அடையாளம் காணும் விதத்தில் விசேட முறைமை நடைமுறைப்படுத்தப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

செவித்திறன் குறைபாடுடையோருக்கு சைகை மொழியில் வாக்குச் சீட்டு குறித்து தெளிவுப்படுத்துவதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதன் முன்னோடித் திட்டங்கள் கடந்த சில நாட்களாக பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டதுடன் அதன் வெற்றிகரமான பெறுபேறுகளின் அடிப்படையில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கும் அதே வசதிகள் வழங்கப்படவுள்ளன.

வலது குறைந்தோர் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கும் விசேட வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பதிவாகியுள்ள வாக்காளர்களுக்கும் விழிப்புலனற்றோர் மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர், கிராம உத்தியோகத்தர் மூலம் கண்டறியப்பட்டு அவர்களூடாக தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப் படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் கூறினார். (அ)

## திடீரென தீப்பற்றிய கார்!

கொழும்பு, ஜூலை 21


பாணந்துறையில் இருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்த கார் ஒன்று கினிகத்ஹேனை - தியகல பகுதியில் வைத்து திடீரென தீப்பற்றியுள்ளது.

இதன் காரணமாக நேற்று முற்பகல் 11 மணிமுதல் சுமார் ஒரு மணிநேரம் குறித்த வீதியுடனான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டதாக கினிகத்ஹேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த காரில் 5 பேர் பயணித்த நிலையில், அதில் ஏற்பட்ட தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முற்பட்ட ஒருவர் எரிகாயத்துக்கு உள்ளானதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், கார் முற்றாக தீக்கிரையாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டது. கார் தீப்பற்றியமைக்கான காரணம் தெரியவரவில்லை. (அ)





தமிழ்நாட்டின் புகழ்பெற்ற பட்டிமன்ற பேச்சாளர்களான ராஜா, பாரதி பாஸ்கர் பங்கேற்றவிவாத நிகழ்ச்சி நேற்று யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

## 22ஆவது திருத்தம் தேவையா?

### சுரேஷ் பிரேமச்சந்திரனும் கேள்வி



யாழ்ப்பாணம், ஜூலை

ஜனாதிபதி தேர்தல் அறிவிப்புக்கள் வெளிவர உள்ள நிலையில் 22 ஆவது திருத்த சட்டம் தேவையா? இது தேர்தலை குழப்புவதற்கான ஏற்பாடா எனும் சந்தேகம் தற்போது பலரிடம் ஏற்பட்டுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

22ஆவது திருத்த சட்டத்தை கொண்டு வருவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது. இந்த சட்டத்தால் எந்த பாதிப்பும் இல்லை. ஆனால் ஜனாதிபதி தேர்தல் நடக்க இருக்கும்போது இந்த திருத்தம் தேவையா எனும் கேள்வி எழுகிறது.

இப்போது ஏன் அவசரப்பட்டு மாற்ற முனைகிறார்கள்? தேர்தலை குழப்பும் நடவடிக்கையாக இருக்கும் எனச் சந்தேகிக்கிறோம்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில், நாடு வக்குரோத்துக்கு போய் விட்டது என தேர்தலை காலவரையின்றி ஒத்தி வைத்துள்ளனர்.

தேர்தல் இரத்து செய்யப்படவில்லை. அதனால் வேட்பு மனுவுக்கான காசு திருப்பி கொடுக்கப்படவில்லை. சுயேச்சையாக போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்தவர்களுக்கு வேட்பு மனு பணம் அதிகம். அவர்களின் பணம் திருப்பி கொடுக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடைபெறலாம் என்ற நிலை காணப்படுகின்ற போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அபிவிருத்தித் திட்டங்களுக்கு என 5 கோடி ரூபாய் முதல் 10 கோடி ரூபாய் வரையில் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் மதுபானச்சாலைகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன எனவும் செய்திகள் மூலம் அறிந்து கொண்டேன்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்பதற்காகவே, அவ்வாறு அபிவிருத்திக்கு என கோடிக்கணக்கான பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிடக் கூடியவர்கள் யாழ்ப்பாணம் நோக்கி வந்து 13ஆவது திருத்தம் தருவோம் என்கின்றனர்.

ஆனால் மாகாண சபைத் தேர்தல் நீண்ட காலமாக நடத்தப்படாமல் இருப்பது பற்றி கதைக்கவே இல்லை - என்றார். (அ)

வீடு/அறை வாடகைக்கு தேவை

யாழ் நல்லூர் கோயிலுக்கு அண்மையில் சிறிய வீடு/அறை குறுகிய காலத்திற்கு வாடகைக்குத் தேவை.

தொ.பே. இல: - 0771038148

# இளைஞர்களின் உரிமைகளை பாதுகாக்க நிலையான சட்டம், கொள்கை அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

குருநாகல், ஜூலை 21

இளைஞர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நிலையான சட்டங்களும் நிலையான தேசியக் கொள்கையும் வகுக்கப்படுவது அவசியமான ஒன்றாகும். இதனைக் கொண்டு வருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எமது நாட்டு இளைஞர்களை முற்றிலுமாக ஒதுக்க ஒரு சகாப்தம் உதயமாகியுள்ளது. ஐந்து வருடங்களுக்கு அல்லது ஆறு வருடங்களுக்கு ஒருமுறை மாத்திரம் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கலாசாரம் எமது நாட்டிலிருந்து வருகிறது. அவ்வாறு நடந்து கொள்வது தவறான செயலாகும் என்றும் சஜித் கூறினார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 344 ஆவது கட்டமாக 11 இலட்சத்து 77,000 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன குருநாகல், படுவஸ்நுவர மேற்கு, நாகொள்ளாகொட மத்திய கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தேசிய இளைஞர் கொள்கையானது ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்வைக்கப்பட்ட இளைஞர் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டமையும். இந்த நாட்டில் இளைஞர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் புதிய சட்ட வரைவை பாராளுமன்றத்தின் ஊடாக உருவாக்குவது காலத்தின் தேவையாக ஐக்கிய மக்கள் சக்தி கருதுகிறது. எமது நாட்டில் நிலையான இளைஞர் ஆணைக்குழுவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

நமது நாட்டு இளைஞர்கள் சந்தர்ப்பவாதமாக பல்வேறு கொள்கை வகுப்பாளர்களால் சுரண்டப்பட்டு பயன்படுத்தப்பட்டாலும், நமது நாட்டுக்கு நிலையான தேசிய இளைஞர் கொள்கையொன்று அவசியமாகும். தேசிய இளைஞர் கொள்கையை உருவாக்கி, அந்த நிலையான கொள்கையின் மூலம் இளைஞர்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளை உணர்ந்து ஒரு நிலையான தேசிய திட்டத்தை ஆரம்பிப்பேன். இளைஞர்களின் உரிமைகள் ஒரு குரல் எழுப்பலாக மட்டும் நின்று விடாது, அந்தக் குரலை செயல்பாட்டுக்கு கொண்டு வரவேண்டும். இலகுவில் மாற்ற முடியாத ஒரு சரத்தாக இளைஞர்களுக்கான உரிமையை அரசமைப்பில் உள்ளடக்குவது காலத்தின் தேவை - என்றார். (எ)

## சிறுவர்கள் தொடர்பில் பெற்றோர் அவதானம்!

கொழும்பு, ஜூலை 21

சிறுவர்கள் மத்தியில் அஸ்மா மற்றும் சுவாச நோய்களின் தாக்கம் தற்போது அதிகரித்துள்ளதாக லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இன்புளுவென்சா மற்றும் சாதாரண வைரஸ் தொற்று என்பன தற்போது பரவி வரும் நிலையில், அது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேநேரம் தற்போதைய காலத்தில் வைரஸ் தொற்று ஒன்று பரவி வருவதால், அனைவரும் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும். இருமல் உள்ளவர்கள் முகக்கவசம் அணிவதால் குறித்த வைரஸ் தொற்று பரவலடைவதில் இருந்து பாதுகாப்பு பெற முடியும் என விசேட வைத்தியர் தீபால் பெரேரா குறிப்பிட்டார். (அ)

## சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தில் ஆசிரியர்கள்

கொழும்பு, ஜூலை 21

சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, ஆசிரியர் அதிபர் தொழிற்சங்கம் எதிர்வரும் நாளை திங்கட்கிழமை முதல் சட்டப்படி தொழில் செய்யும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

தமது கோரிக்கைகள் தொடர்பில், கல்வி அமைச்சர் மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் ஆசிரியர் அதிபர் தொழிற்சங்கம் நேற்று முன்தினம் கலந்துரையாடியிருந்தது.

இந்த நிலையில், பேச்சு தோல்வியடைந்தமையினால் நாளை திங்கட்கிழமை முதல் சட்டப்படி தொழில் செய்யும் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அந்த தொழிற்சங்கங்களின் இணைப்பாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.